# அறத்துப்பால்

அதாவது அறத்தைக் கூறும் பகுதி; இரண்டனுருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.

## அதிகாரம் - 1

## உலகின் தோற்றம்

அதாவது உலகாகிய இடம், உலகத்து உயிர்கள், அவற்றின் நிலை ஆகியவை தோன்றும் முறையாம்.

### 1

**அகர முதல வெழுத்தல்லா மாதி**
**பகவன் முதற்றே யுலகு**

என்பது பாட்டு.

**"அகரம் முதல எழுத்து எல்லாம் ஆதி**
**பகவன் முதற்று ஏ உலகு."**

என்பது அப்பாட்டின் சொற்களைப் பிரித்துரைத்தது.

**அகரம் முதல எழுத்து எல்லாம் ஆதி**
**உலகு பகவன் முதற்று ஏ**

என்பது சொற்களைப் பிரித்து, மொழி மாற்றியமைத்தது.

(மேற் செய்யுட்களுக்கெல்லாம் சொற்பிரித்தலை மட்டும் குறிக்க பி' என்பதையும் அதனோடு மொழிமாற்றையும் குறிக்க '**பி.மா.**:' என்பதையும் குறிக்கப்படும்.)

பொருள்: அகரம் முதல –அகரத்தை முதலாக உடைய, எழுத்து – எழுத்துக்களும், எல்லாம் – அவ்வெழுத்துக்களாலாகிய சொற்களும், அச்சொற்களால் பெறப்படும் பொருள்களுமாகிய எல்லாம். ஆதி – முதன்மையினின்று தோன்றியவை. உலகு பகவன் முதற்று – மக்கள் பகவனை முதல்வனாகக் கொள்ளத்தக்கவர்.

**கருத்து**: உலகும், உயிர்களும், மற்றுள்ளவைகளும் ஆதி என்பதினின்று தோன்றியவை. ஆயினும் உலக மக்கள் பெறத்தக்க பேறு மெய்யுணர்வு ஒன்றே.

ஏ - ஈற்றசை. முதல - குறிப்புப் பெயரெச்சம், மலர, காய (அகம்) என வந்தன காண்க.

ஆதி-வட சொல்லன்று. தூய தமிழ்ச் சொல்லே. அஃது ஆதல் எனப் பொருள்படும் தொழிற் பெயர். ஆ-முதல் நிலை, தி- இறுதி நிலை, செய்தி, உய்தி என்பவற்றிற் போல. ஆதி, முதன்மை ஒரு பொருட் சொற்கள். இதை வடவர் மூலப் பிரகிருதி என்பர்.

ஆதியாவது எல்லாப் பொருளுந் தோன்றுதற்கிடமானது. இதை,

**"தனையறிவரிதாய்த் தாமுக் குணமாய்**
**மனநிகழ் வின்றி மாண்பமைப் பொருளாய்**
**எல்லாப் பொருளும் தோன்றுதற் கிடமெனச்**
**சொல்லுதல் மூலப் பகுதி.**

*- மணி. சமய: **203 - 206***

என்பதாலும் அறிக.

காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று பண்புகளும் ஒன்றுபட்ட நிலை ஆதி என்று உணரப்படும். அவற்றின் கலங்கிய நிலையே இவ்வுலக மெல்லாம் என்க.

எல்லாம் ஆதி என்றதால், உலகம் ஆதி அல்லது முதன்மையி னின்று தோன்றியது என்றவாறாயிற்று. எல்லாம் ஆதியினின்று தோன்றின என்னாது, எல்லாம் ஆதி என்றது என்னையெனில், காரணத்தில் உள்ளதே காரியத்திலும் உள்ளது என்னும் உள்ளது சிறத்தல் (சற்காரியவாதம்) ஆனதோர் முறைகொண்டு, மகனறிவு, தந்தை யறிவு (நாலடி) என்பது போல. எல்லாம் - எழுவாய். ஆதி- பயனிலை.

பகவன் வட சொல் அன்று; பகல் எனப் பொருள்படும் பகவு ஆண்பால் இறுதிநிலை பெற்றது. பகல் - அறிவு, ஆகு பெயர், உணர்வு எனலும் அஃது.

பகவன் ஆண்பாலாற் சொல்லப் படினும், பகவு அஃதாவது உணர்வு என்றே கொள்க. மேலைச் செய்யுட்களிலும் இவ்வாறே.

அறிதற் கெளிதாய் முக்குண மன்றிப்
பொறியுணர் விக்கும் பொதுவு மன்றி
அப்பொருள் எல்லாம் அறிந்திடற் குணர்வாய்
ஒன்றாய் எங்கும் பரந்து நித் தியமாய்
நின்றுள உணர்வாய் நிகழ்தரும் புருடன்"

*- மணி. சமய. 227 - 232*

என்பதால் பகவன் இலக்கணம் அறியப்படும்.

எண்ணூலை வடவர் சாங்கியம் என்பர். எண்ணூல் என்பது அனைத்தும் இருபத்தைந்து தத்துவமென எண்ணப்படுதலின் வந்த காரணப் பெயர்.

சாங்கியம் என்பது சங்கியையையுடையது, சாங்கியம் ஆனது வடமொழித் தத்திதப் பெயர். இவ்வாறு மொழி பெயர்த்துக் கொண்டனர் வடவர்.

எண்ணூல் திருவாரூர்க் கபிலரால் முதற் கண் ஆக்கி இவ்வுலகுக்கு அளிக்கப்பட்ட தத்துவ நூல். தலைக்கழக நாளினின்று சென்ற 2500 ஆண்டு முன் வரை இஃது எழுதாக் கிளவியாயிருந்தது. பின்னர் கபிலர் நூலாக்கினர் என்பர் ஆராய்ச்சியாளர். மேல்நாட்டில் எழுந்த தத்துவ நூல்களுக்கும் எண்ணூலே அடிப்படை என அறிதல்வேண்டும்.

எந்நாளில் நூல் தோன்றுகின்றதோ அந்நாளில் மக்களிடம் பரவி யிருந்த பண்பாட்டின் அடிப்படையில் தான் நூற் கருத்துக்களும் அமையும் என்பது இயற்கைச் சட்டம். திருவள்ளுவர், திருக்குறளும் பெரும்பாலும் எண்ணூற் கொள்கையின் அடிப்படையில்தான் எழுந்துள்ளது என்பது மறுக்கக் கூடியதன்று. இஃது மேல் வரும் செய்யுட்களின் உரைகளில் எடுத்துக் காட்டப்பெறும். மற்றும் நீத்தார் பெருமை ஏழாம் செய்யுள் உரையில் எண்ணூற் கொள்கை விரிக்கப்படும். அங்குக் காண்க.

இக்குறட்பாவுக்குப் பலரெல்லாம் பலவாறு பொருள் கூறினார். அவையனைத்தும் தத்தம் சமயத்தை அடிப்படையாகக் கொண்டவை. திருவள்ளுவர் சமையக் கணக்கர் மதி வழியே நூல் செய்தாரிலர்.

## வள்ளுவர் உள்ளம் என்னும் இவ்வுரையின் மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** பகவன் என்பதற்கு மெய்யுணர்வு, அதாவது அறிவு என்று பொருள் கூறிக் கடவுள் என ஒருவர் இல்லை என்று ஆக்க எண்ணுகின்றீரா?

**உரை ஆசிரியர்:** ஆமாம் "அறிவான தெய்வமே" என்று தாயுமானாரும், "அறிவை அறிவது பொருளென அருளிய குருநாதா" என்று அருணகிரிநாதரும் ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர்வில்லாதவர்க்கு என்று இந்நூலாசிரியரும் போல.

**நாத்திகன்:** அறிவு ஒன்றே பெறத்தக்கது என்று கூறிக் கடவுள் ஒருவர் உண்டு என்பதை உறுதி செய்கின்றீர்களா?

**உரை ஆசிரியர்:** பெறத்தக்கது அறிவு என்று நான், உண்மை உரை கூறினேன். அதனால் கடவுள் ஒருவர் உண்டு என்று ஆய் விடாது. அப்படி ஆய்விடுமானால் ஆய்விடட்டும். அதனால் உமக்கென்ன முழுகிப் போகும்?

**ஆத்திகன்:** மக்கள் பெறத்தக்கது அறிவு என்று மட்டும் கூறிய நீவிர் அறிவாகிய கடவுள் என்று ஏன் கூறவில்லை?

**உரை ஆசிரியர்:** கடவுள் என்ற சொல் மக்கள் அறிவுபெறாத காலத்தில் ஏற்பட்டதாய் இருக்கலாம். கடவுள் - கடந்தது; அறிவுக்கு எட்டாதது என்ற அதன் பொருளையும் நோக்குக. எட்டாத ஒன்றுக்குப் பெயர் எப்படி எட்டியிருக்கும்? இவைகளைக் கருதி யன்றோ வள்ளுவர் தம் நூலில் கடவுள் என்ற பெயரையே எடுத்தாளாது விட்டார்.

**நாத்திகன்:** சாங்கியம் என்பது ஒரு மதமா?

**உரை ஆசிரியர்:** இல்லை. தமிழர்பால் தொன்று தொட்டு இருந்து வரும் பண்பாடு. இடையில் திருவாரூர்க் கபிலர் எண்ணூல் என்ற பெயரால் நூலாக இயற்றியருளினார்.

**நாத்திகன்:** [illegible]

**உரை ஆசிரியர்:** மேல் என்றால் வானத்தை நோக்கி அண்ணாந்து பார்ப்பது இந்நாள் வழக்கம். இந்நாளில் ஏற்படும் நூற்களும் அதை அடிப்படையாகக் கொண்டுதான் உண்டாகும். கீழ்ப்புறத் திற்கும் மேல் என்பது பொருந்தும் என்று கொண்டு கீழ்நோக்கார். அதுபோலவே அக்காலத் தமிழர்கள் இந்த உலகம் என்றைக்கு உண்டானது என்று ஆராய்வது பயனற்ற வேலை என்பார், உலகம் ஆதியினின்று முதன்மையினின்று தோன்றிற்று என்றார்! அந்தக் கருத்தின், - பண்பாட்டின் அடிப்படையில் தான் அக் கால நூற்களும் அமைந்தன. உலகம் ஒருவனால் உண்டாக்கப் பட்டது என்பதை அடிப்படையாகக் கொண்டு நூல் அமையாது. இதுதான் சாங்கியத்தின் அடிப்படையில் குறள் உண்டாயிற்று எனப்பட்டது சாங்கியம் மதமன்று; அது எவராலும் உண்டாக்கப் பட்டது, அன்று. அக்கருத்துக்களின் தொகுதியே எழுதாக்கிளவி எனப்பட்டது. எழுதியபின் எண்ணூல் என்றார்கள்.

எண்ணூல் பல மொழியில் பெயர்க்கப்பட்டது. ஆரியர் - திபேத்தியர் முதலியவர்களால் பலவாறு திரித்து எழுதப்பட்டது.

சாங்கியக் கருத்துக்கள் இயற்கையோடு இயைந்தவை. பகுத் தறிவுக்கு ஒத்தவை. ஆதலால்தான் அக்கருத்துக்கள் தத்துவ நூற்கள் என எழுந்த அனைத்திற்கும் அடிப்படையாகி மிளிர்கின்றன.

மதம், சமையம் என்று சொல்லப்படுவன அனைத்தும் ஒருவனால் - ஒரு கொள்கையை நோக்கி மக்களை இழுக்க உண்டாக்கப்படுவன.

சாங்கியம் - கருத்துக்கள் - பண்பாடுகள் எவராலும் - எவரைத் தம்பக்கம் இழுக்கவும் ஆக்கப்பட்டன அல்ல என்பதை உணர்வார் அதை மதம் என்றார் என்பதை நீவிர் இங்கு நினைவிற் கொள்க.

**ஆத்திகன்:** எழுத்தெல்லாம் அகரத்தை முதலாகக் காரணமாகக் கொண்டவை. அதாவது அகரத்தினின்றே மற்ற எழுத்துக்கள் உண்டாயின, இது பெரியோர் கொள்கையல்லவா?

**உரை ஆசிரியர்:** எழுத்துக்கள் அனைத்தும் ஓம் என்றதினின்று தோன்றியவை என்று விளக்கிய மாணிக்க நாயக்கர் சிறியோரா? அன்றியும், அ முதல் ஔ வரைக்குமுள்ள உயிர்கள் பனிரண்டு. அவற்றில் ஓர் எழுத்திலிருந்து மற்றவை தோன்றின என்பது எப்படிப் பொருந்தும்? காலில் விலங்கும் கையில் விலங்கும் உடல் மறைய ஒரே வகைச் சட்டையுமாய்ச் சிறையில் இருக்கும்

பனிரண்டு குற்றவாளிகளில் ஒருவன் மற்றவரை ஆக்கினான் எனில் அதற்கு என்ன அடையாளம்? என்ன ஆதாரம்? சொல்லத்தான் வேண்டும் என்று மதத் தலைவன் சொன்னால் கேட்கத்தான் வேண்டுமென்று மதமக்கள் கேட்டுக் கொண்டிருக் கிறார்கள். இவையெல்லாம் ஊற்றுக்கு நிற்காது.

**ஆத்திகன்:** எழுத்துக்களில் நான் அகரமாய் இருக்கிறேன் என்று கண்ணபிரானே சொல்லவில்லையா?

**உரை ஆசிரியர்:** ஆமாம். கண்ணபிரான் மக்களை இருட்டில் வருக என்று அழைக்கிறான். நாம் ஏன் போக வேண்டும்? வள்ளுவரைப் பின்பற்ற வேண்டுவது வையத்தின் கடனன்றோ?

**ஆத்திகன்:** இந்த அதிகாரத்திற்குக் கடவுள் வாழ்த்து என்று இருந்ததை நீவிர் உலகின் தோற்றம் என்றது என்ன?

**உரை ஆசிரியர்:** இதுதான் வள்ளுவர் உள்ளம். கடவுள் வாழ்த்து இடையில் ஏற்பட்ட வேலை.

**நாத்திகன்:** முதல் நான்கு அதிகாரங்கள் வள்ளுவர் அருளிச் செய்தனவா?

**உரை ஆசிரியர்:** இல்லை என்று வ.உ.சிதம்பரனார் எண்ணுகின்றார். நான் அவ்வாறு எண்ணவில்லை. உரை முழுவதும் நீர் படித்த பின் நான் சொல்லுவது உண்மை என்று உமக்கே தோன்றலாம்.

**- *குயில், கிழமை இதழ்,* 1.12.1959**

## முதற் குறள்

### ஆத்திக நாத்திக வினாவும் விடையும் (தொடர்ச்சி)

**ஆத்திகன்:** உலகு பகவான் முதற்று என்பதன் பொருளைத் தெளிவு படுத்த முடியுமா?

**உரை ஆசிரியர்:** உலகு - உலகினர், பகவன் முதற்று-பகவனை முதன்மையாகக் கொள்ளத்தக்கவர். இங்கு முதன்மை என்பது காரண முதன்மையன்று, இடமுதன்மை. எனவே அறிவை உலக மக்கள் முதலிடத்ததாகக் கொள்ளத்தக்கவர். மக்கள் பெறத்தக்கது அறிவே ஆகும் என்றார். அறிவு ஒன்றை ஆக்கத்தக்கதன்று. எவற்றிற்கும் மேலானது; சிறந்தது; பெறத்தக்கது என்க.

**- *குயில், கிழமை இதழ்,* 8.12.1959**

## 2

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ**
**னற்றா டொழாஅ ரெனின்**

**பி.மா.** : **வாலறிவன் நல்தாள் தொழாஅர் எனின்**
**கற்றதனால் ஆய பயன் என் கொல்**

பொருள்: வாலறிவன் - தூய அறிவுடையவனாகிய பகவனுடைய, நல்தாள் - நல்ல அடியை, தொழாஅர் எனின் - தொழாமற் போவாராயின், கற்றதனால் ஆய பயன் என் கொல்- படித்ததனால் ஏற்பட்ட பயன் என்ன? (இல்லை என்றபடி)

கருத்து: மெய்யுணர்வை உண்டாக்காத கல்வியால் பயனில்லை.

வாலறிவை வாலறிவன் என்றதற்கேற்பத் தத்துவத்தை நற்றாள் என்றார். தாள், அடி, தன்மை, தத்துவம் ஒரு பொருட் சொற்கள். தன்மையின் அடியாகிய தன் என்பது வடமொழிச் செய்கை பெற்றுத் தத்துவமாயிற்று. நற்றாள் தொழுவதாவது, தத்துவ உணர்வு பெறுவது. கடவுளரையும் துறவிகளையும் அடிகள் என்னும் பிற்கால வழக்கும் எண்ணூல் கொண்டே என்க. தத்துவ உணர்வுபெற்ற நிலையே வீடு ஆகிய எண்ணூற் கொள்கை இங்கு அறியத்தக்கது.

தொழாஅர் - ழ் என்பதன் மேனின்ற ஆ தனக்குள்ள இரண்டு நொடி நேர நீட்டலோடு மற்றும் ஒரு நொடி நீட்டலுக்கு அ என்பதையும் வேண்டிற்று. உயிரளபெடை.

### வள்ளுவர் உள்ளம் என்ற இவ்வுரையின் மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் விடையும் வருமாறு:

**நாத்திகன்:** வாலறிவன் என்பதும் வாலறிவுதானோ?

**உரை ஆசிரியர்:** அஃறிணைப் பொருளை உயர்திணையாகச் சொல்லி வைப்பது கவிமரபு என்று தெளிக.

**நாத்திகன்:** வாலறிவு உண்டு. அதற்குத் தாளும் (காலும்) இருக்குமோ?

**உரை ஆசிரியர்:** வாலறிவை வாலறிவன் என்றவர் தத்துவத்தைத் தாள் என்றார். பாட்டுப் படித்துச் சுவை உணரும் ஆற்றல் உமக்கு இருந்தால் இவ்வாறு கேட்க மாட்டீர்.

**நாத்திகன்:** தத்துவம் என்றால் என்ன?

**உரை ஆசிரியர்:** தன்மை என்பது பொருள், வாலறிவன் நற்றாள் என்றால் அறிவின் நல்ல தன்மை என்பதுதான் பொருள், பெறத்தக்கது அறிவின் தன்மை என்றது அறிவுக்குரிய குணம் செயல்களை,

**ஆத்திகன்:** திருக்குறளை நாத்திகத்தை நோக்கி இழுத்துக் கொண்டு போகின்றீரா?

**உரை ஆசிரியர்:** ஆத்திகத்தை நோக்கி இழுத்துக் கொண்டு போவதும் நாத்திகத்தை நோக்கி இழுத்துக் கொண்டு போவதும் பிழையே. ஏன் எனில் வள்ளுவர் உள்ளம் நாத்திகமும் இல்லை ஆத்திகமும் இல்லை. அவர்நெறி உண்மை நெறி. வையத்தில் வாழ்வாங்கு வாழும் நெறி.

**ஆத்திகன்:** மெய்யுணர்வு என்று நீவிர் சொல்வதெல்லாம் கடவுளை அல்லவா?

**உரை ஆசிரியர்:** மெய்யுணர்வை ஆத்திகன் கடவுள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறான். நாத்திகன் கடவுளின்மை தான் மெய் யுணர்வு என்கிறான். இதுதான் நன்று இதுதான் நன்று அன்று என்று கருதி அந்நெறியை மேற்கொள்வது மெய்யுணர்வு.

**நாத்திகன்:** மெய்யுணர்வு உண்டாக்காத கல்வியும் உளவோ?

**உரை ஆசிரியர்:** மிகுதியாய் உண்டு. அவை ஆரியர் நூற்கள். பாரதம் இராமாயணம் புராணங்கள் தமிழர்களால் கற்கத் தகாதவை! பொய்கள் நிறைந்தவை. பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை. தமிழரின் செயலுக்கு ஒத்துவராதவை. எடுத்துகாட்டு: ஒரு பெண் ஐந்து ஆடவரை மணந்து கொண்டதாகப் பாரதம் பகர்கின்றது. தமிழர் ஒத்துக் கொள்ளலாமா? உலகம் ஒத்துக் கொள்ளுமா?

**நாத்திகன்:** நன்று! நன்று!

**ஆத்திகன்:** மெய்யுணர்வை உண்டாக்கத் தக்க நூற்கள் தமிழ் நூற்களோ?

**உரை ஆசிரியர்:** தமிழ் நூற்களும், ஆரியர் நூற்கள் ஒழிந்த பிற மொழி நூற்களும் என்று கடைப்பிடிக்க.

**ஆத்திகன்:** ஏன் அப்படி?

உரை ஆசிரியர்: ஒருவன் ஒரு கொலை செய்துவிடுகிறான். அக் கொலை செய்ததனால் கொலை செய்தவனுக்கு உண்டாகும் மனக் கோட்டம் ஒரு பார்ப்பனனுக்கு ஒன்று கொடுப்பதனால் தீர்வ துண்டா? தீர்ந்து விடுகின்றது என்று ஆரியர்நூல் சொல்லுகிறது. இதை அறிவுலகம் ஒத்துக் கொள்ளுமா? மக்களில் உயர்வு தாழ்வு பிறப்பிலேயே உண்டு என்கிறது. அறிவுலகம் ஒத்துக் கொள்ளுமா? இவ்வாறு அமைந்த நூற்களைக் கற்கலாமா?

'எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல் மற்றன்ன செய்யாமை நன்று' என்றும் 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்றும் வள்ளுவர் அருளினார். அவர்போலவே பிற தமிழ்ச் சான்றோரும் சாற்றினார்கள். கற்கத் தக்கவை இத்தகைய தமிழ் நூற்களன்றோ?

**- குயில், கிழமை இதழ், 8.12.1959**

## 3

**மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.**

**பி.: மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்**
**நிலம் மிசை நீடு வாழ்வார்.**

பொருள்: மலர் மிசை - உலக உயிர்கள் மாட்டு, ஏகினான்- சென்று பரந்தவ னாகிய பகவனுடைய, மாண் அடி - பெருமை பொருந்திய அடிகளை, சேர்ந்தார் - பின்பற்றியவர்கள், நிலமிசை - இவ் வுலகின்கண், நீடுவாழ்வார் - நீண்டகாலம் வாழ்ந்திருப்பார்கள்.

கருத்து: மெய்யுணர்வு பெற்றார் தாம் விரும்பும் காலம் மட்டும் இவ்வுலகில் வாழ்ந்தின்புறுவர்.

மலர் - மலர்தல் என்பதின் முதனிலைத் தொழிற் பெயர். உலகுக் கானது ஆகுபெயர். உலகை மலர் என்றும் மயில் என்றும், ஆதியை அரும்பு என்றும், மயிலின் முட்டை என்றும் எண்ணூல் கூறும். இதை உட்கொண்டே உலகை மலர் என்றார் ஆசிரியர். ஏகுகின்றான் என முக்காலத்திற்கும் பொதுவாகக் கூறாமல், ஏகினான் என இறந்த காலத்தாற் கூறியது ஆதியினின்று உலகம் வெளிப்பட்ட பின்னரே பகவனின் இறைமை தோன்றிய தென்பதைக் குறிக்க.

நிலமிசை நீடுவாழ்வார் என்பதற்கு, வீட்டுலகில் நீண்ட நாள் வாழ்ந்திருப்பார் எனப் பொருள் கூறுவாருமுளர். அவர்அறியார். ஆசிரியர், வீட்டுலகையே கூறியிருப்பாரானால் நீடு வாழ்வார் எனக் கூறியிரார், வீட்டுலகில் நீணாள் வாழ்தலும், ஐந்தாறு நாள் வாழ்ந்து மீளுதலும் என இரண்டில்லையாதலால். அன்றியும் நிலமிசை என்பது வீட்டுலகில் எனப் பொருள்படாமையும் உணர்க. "மன்னுக பெரும நீ நிலமிசை யானே (புறம்-6) என்றவிடத்தும் அப்பொருள் ஆதல் அறியற்பாலது. மிசை ஏழனுருபு.

ஆரிய மறைச்சார்பினர், வேதநூற் பிராயம் நூறு என்பர். அவர்கள் தமிழ்ச் சான்றோர் பன்னூறாண்டுகள் வாழத் தெரிந்தவர்கள் - அவ்வாறு வாழ்ந்தவர்கள் என்பதையும் நம்பாத "நாத்திகர்கள்".

மற்றும்,

**"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே."**

**"நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்**
**வாட்டமும் இல்லை; *மனைக்கும் அழிவில்லை."**

**"வளியினை வாங்கி வையத்தில் அடுக்கிடில்**
**பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்."**

என்று திருமூலர் அருளிச் செய்தவற்றையும்,

**"கூற்றங் குதித்தலும் கைகூடும்"**

என இவ்வாசிரியர் குறித்ததையும்,

**"நோற்றார் மன்ற தாமே கூற்றம்;**
**கோளுற விளியார் பிறர்கொள விளிந்தோர்"**

என மாமூலனார் அருளியதையும் நோக்குக.

---

*மனை

## வள்ளுவர் உள்ளம் என்ற இவ்வுரையின் மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** அன்பர் உள்ளமாகிய மலரில் இருப்பவன் என்று மலர்மிசை யேகினான் என்பதற்குப் பொருள் கொண்டால் வரும் இழுக்கென்ன?

**உரை ஆசிரியர்:** அரும்பு - ஆதி; அதாவது முதன்மைக்குப் பெயர். மலர் உலகின் பெயர். உலகிலுள்ள உயிர்களுக்கும் பெயர். அறிவு உயிர்களிடமெல்லாம் பரவியிருப்பது தெரிந்தது. அறிவில்லாத இடத்தில் உயிர் இல்லை அன்றோ! ஆதலால் இவ்வாறு மெய்ப் பொருள் கூறப்பட்டது. இதனால் வரும் இழுக்கு என்ன?

**நாத்திகன்:** ஆன்மா எங்கும் பரவி இருப்பது என்று ஆத்திகர் சொல்வ தொப்பவே அறிவு உயிர் தோறும் பரவி இருக்கிறது என்று கூறி ஆத்திகத்தை வலியுறுத்துகின்றீரா?

**உரை ஆசிரியர்:** மக்களிடத்து ஆறறிவு இருத்தலைப் பார்! விலங்குகளிடத்து ஐந்தறிவு இருத்தலைப் பார்! வண்டு, நண்டு முதலியவற்றிடத்து நான்கறிவு பார்! சிதல், எறும்புகளிடத்து மூன்றறிவு பார்! நத்தை அட்டைகளிடம் இரண்டறிவைப் பார்! புல், மரம் முதலியவற்றில் ஓரறிவு பார்! எனவே, உலக உயிர்களிடத்து - அறிவு பரவியிருப்பது உண்மை. இதைப் பார்த்து ஆன்மா எங்கும் பரவி இருக்கிறது என்றார் ஆத்திகர். அதைப் பார்த்தா இவ்வுரை கூறப்பட்டது?

**ஆத்திகன்:** நிலமிசை நீடு வாழ்வார், அதாவது உலகில் நீண்ட நாள் வாழ்வார் எனில் ஏன் வாழ வேண்டும்? அவ்வாறு வாழ எண்ணுவது பற்று விடாமையை அன்றோ குறிக்கும்?

**உரை ஆசிரியர்:** உலக மக்களை நல் வழியிற் செலுத்தி வாழ வைப்பதற்கு வாழுவோர்; இல்லத் துறவிகள்.

**நாத்திகன்:** இப்போது நூறாண்டுகட்கு மேல் உயிர் வாழ்வோர் பலர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் இல்லத் துறவிகள்தாமோ?

**உரை ஆசிரியர்:** பின், பிஞ்சில் பழுத்தவர்களா? ஒழுக்கமில்லாதவர்களா? ஊரான் பணத்துக்கு ஆசைப்பட்டவர்களா? இல்லத் துறவிகளே (அதாவது) பிறர் நலங் கருதி தன்னலந் துறந்தவர்களே!

**ஆத்திகன்:** மாணடி சேர்ந்தார் எனில் அறிவு பெற்றவர்கள் என்பது உம் உரை; அறிவு பெற்றவர் பிறர் நலம் காப்பவரா?

**உரை ஆசிரியர்:** இவ்வாசிரியரும் 'அறிவினான் ஆகியதுண்டோ பிறிதின் நோய், தன்நோய்போற் போற்றாக் கடை?' என்றதும் காண்க. அறிவின் பயன் அறிக.

- *குயில், கிழமை இதழ்*, **15.12.1959**

## 4

**வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கி**
**யாண்டு மிடும்பை யில.**

**பி.மா. :** **வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு இடும்பை யாண்டும் இல.**

**பொருள்:** வேண்டுதல் வேண்டாமை இலான் - மக்களிடமிருந்து ஒன்றை விரும்புதலும், இவர் இன்னது செய்திலரே என அவர்களை வெறுத்தலும் இல்லாத பகவனின்; அடி - அடியை, சேர்ந்தார்க்கு - அடைந்தார்க்கு, இடும்பை - துன்பம், யாண்டும் இல - எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லை.

**கருத்து:** மெய்யுணர்வு பெற்றோர்க்கு யாண்டும் துன்பம் ஏற்படுவதில்லை.

இக்குறட்பாவால், உருவ வணக்கத்தையும், அவ்வுருவங்கட்குக் கோயில் கட்டுவது, உணவு, உடை, இழை தருவது முதலிய (மடமை) வழக்கத்தையும் எதிர்த்தார் ஆசிரியர். யாண்டும் என இரட்டுற மொழிந்தார். எவ்விடத்தும் என்றதால் அரச வாயிலாயும், நோய் வாயிலாயும், தீயவர் வாயிலாயும் அறியாமை வாயிலாயும் வருந்துன்பங்கள் என்றாராயிற்று.

சேர்ந்தார்க்கு யாண்டும் - சேர்ந்தார்க்கியாண்டும். குற்றியலுகரத்தின் முன் யகரம் வர அவ்வுகரம் இகரமாகத் திரிந்தது. **"யகரம் வரக்குறள் உத்திரி யிகரமும், அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய"** (நன்னூல்)

## வள்ளுவர் உள்ளம் என்ற இக்குறளுரையின் மேல் எழுந்த ஆத்திக நாத்திகர் வினாவும் ஆசிரியர் விடையும் வருமாறு

**ஆத்திகன்:** வேண்டுதல் வேண்டாமை இலான் என்பதற்கு ஒரு பொருளை விழைதலும் வெறுத்தலும் இல்லாதவன் எனப் பரிமேலழகர் கூறியபடி பொருள் கொண்டால் வரும் இழுக்கு என்ன?

உரை ஆசிரியர்: ஒரு பொருளை விரும்புவோன் அதே பொருளை விரும்பாமலும் விடுவான் என்பதோ, ஒரு பொருளை வெறுப்பவன் அதே பொருளை விரும்புவான் என்பதோ எவ்வாறு பொருந்தும்? எனவே பரிமேலழகர் பொருள் இழுக்குடையது.

நாத்திகன்: வேண்டுதல் வேண்டாமை இலான் என்றதும் அறிவைத் தானோ?

உரை ஆசிரியர்: வேறென்ன? அறிவுதான் பிறரிடமிருந்து ஒன்றை விரும்பாதது. அப்பிறர் ஒன்று தாராமை பற்றி அவரை வெறுக்காதது.

**ஆத்திகன்:** அடி சேர்தல் என்பதும் தத்துவ உணர்வு பெறுவதுதானோ?

உரை ஆசிரியர்: ஆம்.

**ஆத்திகன்:** இடும்பை என்பதற்குப் பரிமேலழகர் பிறவித் துன்பம் என்று பொருள் கூறினார். அவ்வாறு கூறுவதால் வரும் இழுக்கு என்ன?

உரை ஆசிரியர்: பிறவித் துன்பம் என்று பொருள் கூறினால் மறு பிறப்பை ஒத்துக் கொண்டதாகும். அது வள்ளுவர் உள்ளமன்று.

இடும்பை எங்கெங்கு இருந்து உண்டாகும் என்னில் - இயற்கையின் மோதுதலாலும், ஒழுக்கக் கேட்டினாலும், தன் தந்தை தாய்மாரின் ஒழுக்கக் கேட்டினாலும் வரும். எவ்வகைத் துன்பமும் அறிவு பெற்றானை அண்டுவதில்லை என்பதும் இங்கு அறிந்து வைக்க.

*- குயில், கிழமை இதழ், 22.12.1959*

## 5

**இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

**பி.மா. : இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு**
**இருள்சேர் இருவினையும் சேரா.**

**பொருள்:** இறைவன் - எங்கணும் இறைந்தவனாகிய பகவனின், பொருள் சேர் - உண்மையான, புகழ் புரிந்தார் மாட்டு - புகழை விரும்பிச் சார்ந்தாரிடத்தில், இருள் - அறியாமையானது, சேர் - சேர்க்கின்ற, இருவினையும் - நல்ல செயல் எனப்படுவதும் தீயசெயல் எனப் படுவதும், சேரா - சேரமாட்டா.

**கருத்து:** மெய்யுணர்வை நாடுவாரிடத்தில் அம் மெய்யுணர்வு பெறுதலாகிய நிலையான இன்பத்துக்குக் காரணமாகிய செயலன்றி மற்றுள்ள பொருள் சேர்த்தல் முதலியவற்றிற்குக் காரணமாகிய நல்வினை, தீவினைகள் நாடமாட்டா.

"செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்" சேர்தலென்னும் பேச்சுக்கே இடமின்றி ஒருவன் மெய்யுணர்வடைந்த நிலையே வீட்டு நிலை - அதாவது, நிலையான இன்பநிலை என்னும் எண்ணூல் முடிபு இங்கு எண்ணி மகிழத்தக்கது. மெய்யுணர்வொன்றே புகழுக்குரியது என்பார் புகழ்புரிந்தார் மாட்டு என்றார்.

### இக்குறட்பா உரைமேல் எழும்
### ஆத்திக நாத்திகர் வினாவுக்கு
### உரை ஆசிரியர் தரும் விடை வருமாறு:

நாத்திகன்: இப்பாட்டின் பொருளை இன்னும் தெளிவுபடுத்த முடியுமா?

உரை ஆசிரியர்: மனம் தன்னிலையில் நிற்பதே பொருள்; அதாவது அடையத்தக்கது! அது வெளியிற் குதிப்பது - அதாவது பொருள் களின் மேற் பற்றுக் கொண்டு திரிவது துன்பத்தையே செய்யும். அப்படிச் செல்வதென்பது நல்ல செயல் செய்வதாகவும் சொல்லப்படலாம். தீய செயல் செய்வதாகவும் சொல்லப்படலாம். இரண்டும் தீமையையே பயக்கும். அறிவை அதாவது மெய்யுணர்வை அடைந்தவர்களிடம் இந்த இரண்டு வகைச்

செயல்களும் (நல்வினை, தீவினை) இரா. அவர்களின் மனம் தன் னிலையிலேயே இருக்கும் என்பதுதான் இச் செய்யுளின் கருத்து.

**ஆத்திகன்:** மெய்யுணர்வு என்பது என்ன?

**உரை ஆசிரியர்:** உணர்வு என்பதற்கும் அறிவு என்பதற்கும் வேறுபாடு உண்டு.

உணர்வு மன அறிவு. அது நுண்பொருள் பற்றியது. அறிவு புலனறிவு. அது பருப்பொருள் பற்றியது.

உணர்வுடையான் உணர்ந்த நிலையும் செயல் செய்யும் நிலையும் ஒருங்கு உடையவன். இதைத்தான் 'ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால் உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து, நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்றார் ஆழ்வார்.

அறிவுடையான் அறிந்த நிலையும் செயல் செய்யும் நிலையும் ஒருங்கு உடையவன் அல்லன். அறிந்தான் அறிந்தபடி செய்யுமுன் ஐயந்திரிபுகளுக்கும், ஆராய்ச்சிக்கும் உள்ளாகிக் கிடப்பான்.

இங்குக் காட்டிய உணர்வைத் திருவள்ளுவர் மெய்யுணர்வு என்று கூறிச் சிறப்பித்தார். "ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே, மெய்யுணர் வில்லாதவர்க்கு" என்பதிற் காண்க.

இனி,

உணர்வை அறிவென்றே சொல்வதும் நூல்வழக்கே என்க.

***- குயில், கிழமை இதழ், 28.12.1959***

## 6

**பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்.**

**பி. : பொறி வாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்கம்**
**நெறி நின்றார் நீடு வாழ்வார்.**

**பொருள்:** பொறி வாயில் ஐந்து - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளை வாயிலாக உடைய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்ற மெனும் ஐந்தும் பற்றி வரும் ஐந்து அவாவினையும், அவித்தான் - நீக்கினோனாகிய பகவனைப் பற்றிய, பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் - மெய்யான ஒழுக்க நெறிக்கண் வழுவாமல் நின்றவர்கள், நீடு வாழ்வார் - எந்நாளும் இன்புற்று வாழ்வார்கள்.

**கருத்து:** அவா நீங்கிய நிலையானது மெய்யுணர்வு, அவ்வுணர்வை அடைதற்கு மெய்யான ஒழுக்க நெறி நிற்றல் வேண்டும்.

நீடு வாழ்தலாவது, அருள் மிகுதியால் தன்னலம் நீக்கி மக்கட்குச் செய்யும் தொண்டு நிறைவுறு மட்டும் துன்பின்றி வாழ்ந்திருத்தல். தீர் ஒழுக்கம் - வினைத் தொகைநிலைத் தொடர்.

ஐந்தவித்தான் - இரண்டனுருபும் பயனும் உடன் தொக்கத் தொகை. ஐந்தவித்தானைப் பற்றிய என விரிக்க. ஒழுக்கநெறியை இறைவனே இயற்றினான் என்ற பொருளில் கபிலரது பாட்டு என்பது போல் செய்யுட்கிழமைப் பொருளில் வந்தது என்பர் சிலர். அவரெல்லாம் உருவ வணக்கத்தை நாட்டில் வளர்த்து இன நலம் தேடும் கலகக் கொள்கையர்.

## இக்குறட்பாவின் உரையின் மேல் எழும் ஆத்திக நாத்திகர் வினாவும் உரையாசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** ஐந்தவித்தான் என்றதும் அறிவைத்தானோ?

**உரையாசிரியன்:** மெய்யுணர்வு நிலைதான் ஐந்தவித்த நிலை.

**நாத்திகன்:** மெய்யொழுக்கம் என்றதால் பொய்யொழுக்கம் என்பதும் ஒன்று உண்டு போலும்! அஃதென்ன?

**உரையாசிரியர்:** நல்லொழுக்கம் தீயொழுக்கம் என இந் நூலாசிரியரே சொல்லியருளினார் அன்றோ! பொய்யொழுக்கம்:

> **“கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்**
> **புன்மை தெரிவா ரகத்து”**

என்ற குறட்பாவால் கொலைத் தொழிலுடைய ஆரியர் எவ்வாறு தம்மைக் காட்டிக் கொண்டாலும் அவர்கள் புலைவினையரே. இச் செய்தி புன்மை இது, மேன்மை இது என்று நுண்ணிதின் அறிவோர் நெஞ்சத்ததன்றி அறியார்க்குத் தெரியவழியில்லை என்று சுட்டினார் ஆயிற்று. இதுபோற் பல உண்டு. இதனால் பொய்யொழுக்கம் இன்னதென்பதும், அந்நெறியே ஒழுகுவார் உளர் என்பதும் கண்டோம் அன்றோ?' நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம், என்றும் இடும்பை தரும் என்பதும் காண்க.

நாத்திகன்: ஐந்தவித்தானுக்கே நீடு வாழ்தல் முடியும் என்றார் எனில் இல்லறத்தானுக்கு அது முடியாது என்றாரா ஆசிரியர்? இதுபற்றி விளக்குக.

உரையாசிரியர்: ஐந்தவித்தலின் அதாவது பற்றின்றி வாழ்தலின் பயன்களில் சிறப்பானதொன்றைக் கூறினார். பற்றறுத்தல் என்றதொரு பண்பாடு துறவிக்கு மட்டுமே நலம் செய்யும் என்று அவர் கூறினாரல்லர். இல்லறத்தானுக்கும் அது தேவை என்பது மட்டுமன்று, இருந்தே தீர வேண்டும் என்றும் அறிய வேண்டும். 'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல், அதனின் அதனின் இலன்' என்றதை நோக்குக. 'அறமெனப் பட்டதே இல்வாழ்க்கை' என்பதையும் எண்ணுக.

இல்லறத்தான் எந்தெந்தப் பொருளின் ஆசையை நீக்கிக் கொள்ளுகின்றானோ, அந்தந்தப் பொருளைத் தேடுதலால் நேரும் துன்பம் இல்லாதொழியும். இஃதுணர்த்துதற்கே இல்லறமே இன்பமாம் என்று குறித்தார். எனவே இல்லறத் தானும் பற்றறுக்க வேண்டும்; அதனால் அவனும் பயன் பெறுவான் - நீடு வாழ்வான் என்க.

**- *குயில், கிழமை இதழ்,* 05.01.1960**

## 7

**தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க் கல்லான்**
**மனக்கவலை மாற்ற லரிது.**

**பி.மா. : மனக்கவலை தனக்கு உவமை இல்லாதான் தாள்**
**சேர்ந்தார்க்கு அல்லால் மாற்றல் அரிது.**

பொருள்: மனக்கவலை - மனத்துன்பத்தை, தனக்கு உவமை இல்லாதான் - தனக்கு நிகர் இல்லாத பகவனின், தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - அடியடைந்தவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு, மாற்றல் அரிது - தீர்த்தல் முடியாது.

கருத்து: உவமை சொல்ல முடியாத மெய்யுணர்வு பெற்றார்க்கன்றி மனக் கவலை தீராது. ஒரு பொருளுக்கு உவமையாக அப்பொருளினும் சிறந்த ஒன்றையே சொல்ல வேண்டும். மெய்யுணர்வினும் சிறந்தது இல்லையாதலின் தனக்குவமை இல்லாதான் என்றார். அரிது- இன்மைப் பொருட்டு, உவமை உவத்தற்றன்மை, உவமை பொருளுக்கு ஆகுபெயர்.

## இச்செய்யுள் உரையின் மேல் எழும் ஆத்திக நாத்திகர் வினாவும் உரையாசிரியர் விடையும் வருமாறு:

**நாத்திகன்:** அறிவு அல்லது உணர்வு மெய்யுணர்வுக்கு உவமை சொல்ல முடியாதா? அவ்வாறாயின் அது கடவுளா?

**உரையாசிரியர்:** மாந்தர் பெறத்தக்கது மெய்யுணர்வு. அதாவது அறிவு என்று வள்ளுவர் கூறியபடி கூறினேன். இதில் கடவுள் பற்றிய செய்தியே எழவில்லை. மாந்தர் பெறத்தக்கது மெய்யுணர்வு என்றேன். அந்த மெய்யுணர்வைத்தான் தனக்குவமை இல்லாதான் என்பது போன்ற வகையில் சொல்லிப் பாடல் வழக்கம் செய்தார் என்கின்றேன். இதுகேட்டும், அப்படியானால் கடவுளா இப்படி என்றால் கடவுளா என்றுகூறி உன் மனத்தைக் குழப்பிக் கொள்ளுவ தால் என்ன பயன்? மெய்யுணர்வுக்கு நிகராக மற்றொன்றைச் சொல்ல முடியாது என்றுதான் பொருள் கூறினேன். இதுதான் வள்ளுவர் உள்ளமும். உவமை சொல்ல முடியாதது மெய்யுணர்வு என்றால் அது கடவுளா என்று கேட்கின்றாய். இது பிழையான கேள்வியாகும்.

**ஆத்திகன்:** தனக்குவமை இல்லாதான் என்று வள்ளுவர் ஓர் உருவத்தைக் கூறினார் அல்லவா?

**உரையாசிரியர்:** இல்லை. தனக்குவமை இல்லாத அறிவு மெய்யுணர்வு என்பதைப் பாவாணர் அவ்வாறு கூறுவது பாவலர் மரபு என்பர்.

இன்னொன்று: தனக்குவமை இல்லாதான் ஒருவனின் உருவம் ஒன்று இருக்கவே முடியாது. எப்போது ஒன்று உருவம் பெற்றதோ அப்போதே அது உவமை சொல்லப்படும் பொருளாகி விடும். மெய்யுணர்வுக்கு அப்படியில்லை. உவமை சொல்ல முடியாதது அது.

**ஆத்திகன்:** தாள் எனில்?

**உரையாசிரியர்:** தன்மை! மெய்யுணர்வின் தன்மை (தத்துவம்) உணர்ந்த விடமே பெறத்தக்கது பெற்றதாகும். மெய்வுணர்வு பெற்ற நிலையில் எந்த மனக்கவலையும் இல்லாதொழியும் என்பது இதன் பொருள். தாள் ஒருவனின் கால் அன்று. தாள், அடி இவை தத்துவம், தன்மை என்னும் பொருளுடையவை.

**- *குயில், கிழமை இதழ்*, 12. 1. 1960**

## 8

**அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்**
**பிறவாழி நீந்த லரிது.**

**பி.மா : பிற ஆழி நீந்தல் அறம் ஆழி அந்தணன்**
**தாள் சேர்ந்தார்க்கு அல்லால் அரிது.**

பொருள்: பிற ஆழி நீந்தல் - அறமல்லாத மறத்தின் பயனாகிய துன்பக் கடலை நீந்திக் கரையேறுதல் என்பது, அறம் அழி - அறத்தின் பயனான இன்பக் கடலாகிய, அந்தணன் - உயிர்களிடத்து அருளுடையானாகிய பகவனுடைய, தாள் - அடிகளை, சேர்ந்தார்க்கு அல்லால் - சேர்ந்தவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு, அரிது - அரிதாகும். (முடியாதென்றபடி)

கருத்து: மெய்யுணர்வு அறக்கடல். அதனைப் பற்றித் துன்பக்கடலைக் கடத்தல் வேண்டும்.

அறம், அதன் பயனாகிய இன்பத்தைக் குறித்தது - ஆகுபெயர். மேலே அறம் என்றதால் அடுத்து வந்த பிற, அறமல்லாத மறத்தின் பயனாகிய துன்பம் எனப் பொருள் கொள்ளப்பட்டது. இதுவும் ஆகு பெயர். அந்தணன் - அம் தண்மை என்னும் சொற்றொடர் அன் இறுதி பெற்றது. அம் தண்மை என்பது அழகிய தட்பம் எனப் பொருள் தந்து அருளைக் குறித்தது. அந்தணன் என்பதற்கு மறையின் அந்தத்தை அணவுவோன் எனத் தம் கலகக் கொள்கைக்கேற்றவாறு பொருள் கூறிப் பொய்ப்பர். அத் தன்மையுடையோர் அந்தண் கூடல், அந்தண் பாதிரி, அந்தண் காவிரி என வருவன கண்டு தெளிந்து அடங்க வேண்டும். அந்த தண்மையுடையதெனில் பொருந்துமோ எனிற் பொருந்தும். அருள் என்பதே உணர்வின் பயனன்றோ? இன்பக் கடல் என்று மெய்யுணர்வைக் கூறலாமோ எனில் கூறலாம். மெய்யுணர்வு தான் இன்பமாதலால். ஆழி - ஆழ்ந்தது. காரணப் பெயர்.

### இச்செய்யுளின் உரைமேல் எழும் ஆத்திக நாத்திகர் எழுப்பும் வினாவும் உரையாசிரியர் விடையும் வருமாறு:

நாத்திகன்: அறவாழி அந்தணன் என்று, மெய்யுணர்வைக் கூறுவதன் மூலம் தென்னாட்டுப் பார்ப்பனர்க்கு உயர்வு தந்து விடுகின்றாரா வள்ளுவர்?

**உரை ஆசிரியர்:** இல்லை, அவ்வாறு கூறி இங்குள்ள பார்ப்பனரின் வாயை அடக்குகின்றார் திருவள்ளுவர். வேறென்ன? அந்தணன் என்ற பெயர் மெய்யுணர்வுக்கே - உயர்ந்த பொருளுக்கே பொருந்தும். அருளில்லாத பார்ப்பனர்க்குச் சிறிதும் பொருந்தாது என்பதை யல்லவா வள்ளுவர் சொல்லாமற் சொன்னார்?

**ஆத்திகன்:** அறவாழி அந்தணன் என்று சொன்னதால் வள்ளுவர் கடவுளுக்கு உருவம் காட்டினார் அன்றோ?

**உரை ஆசிரியர்:** கடவுளைப் பற்றி இங்குப் பேச்சேயில்லை. வள்ளுவர் உள்ளங்கண்டவர்கள் இதை நன்கு அறிவார்கள். அறவாழி - இன்பக்கடல், அந்தணன் - அருளுடைய மெய்யுணர்வு. இதில் கடவுள் முழக்கம் எள்ளளவும் இல்லாமை உணர்க.

**ஆத்திகன்:** இன்பக் கடலாகிய அருளுடைய மெய்யுணர்வு என்று பொருள்படுகின்றதால் அது பொருந்தாதன்றோ?

**உரை ஆசிரியர்:** ஏன் பொருந்தாது? மெய்யுணர்வு இன்பக் கடல்தான். அது அருளுடையதுதான். அறிவில்லாத ஒன்றில் இன்பத்தை யும் அருளையும் காண முடியுமோ?

**நாத்திகன்:** அறவாழி என்பதற்குத் தருமசக்கரம் என்று பொருள் கொள்ளுகின்றார்களே சிலர்?

**உரை ஆசிரியர்:** அருக சமயத்தார் ஆழி என்பதைச் சக்கரம் என்று கூறி இழுக்கடைகின்றார்கள். ஏன்? அறவாழி என்றால் தருமச் சக்கரம் என்பவர் பிற ஆழி என்பதற்கு என்ன பொருள் கூறுவார்? மேலும் நீந்துவர் என்று வள்ளுவர் சொல்லி வைத்தார். நீந்தப்படுவது கடலா? - அல்லது சக்கரமா? - கடல் தானே?

- *குயில், கிழமை இதழ்,* **26.1.1960**

## 9

**கோளிற் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்**
**றாளை வணங்காத் தலை.**

**பி.மா. :** **எண் குணத்தான் தாளை வணங்காத் தலை**
**கோள் இல் பொறியின் குணம் இல ஏ.**

பொருள்: எண் - மக்கள் சிறப்பென எண்ணுகின்ற, குணத்தான் - குணங்களையுடைய பகவனின், தாளை - அடியை, வணங்காத்

தலை - வணங்காவிடத்து, கோள் இல் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றவற்றில் தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்ள முடியாத, பொறியின் - மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறிகளைப் போல, குணம் இல - ஒருவனுக்கமைந்த மன அறிவாகிய உணர்வும் பயன்படல் இல்லை.

**கருத்து:** எப்பொருட்கும் மேற்பொருள் என்று மெய்யுணர்வை உணரா விடத்து மற்ற ஐயுணர்விருந்தும் பயனில்லை.

வணங்கல் - தன்னினும் உயர்ந்த பொருளை உயர்ந்ததென்று கொள்ளுதல். வணங்காத் தலை என்பது வினை எச்சம், "ஈத லியையாக் கடை" (குறள்) என்பது போல. அறிவு வேறு, உணர்வு வேறு, அறிவு - பருப்பொருள் பற்றியது, உணர்வு - நுண்பொருள் பற்றியது. அறிவு ஐந்தும் பொறிகள் ஐந்தினையும் வாயிலாக உடையன. உணர்வு - மனத்தை வாயிலாக உடையது.

வணங்காத் தலை என்பதற்கு வணங்காததாகிய தலை என்று பொருள் கொள்வாருமுளர். அவர் அறியார். மெய்யும் வாயும் கண்ணும் மூக்கும் காதும் பயனற்றுப் போகையில் தலை மட்டும் வாழுமோ? இனி எண்குணத்தான் என்பதற்கு எட்டுக் குணத்தான் என்று பொருள் கூறி, இது சைவர் நூலிற் கண்டது என்றும் கூறுவர். சமயக்கணக்கர் மதிவழி கூறாத வள்ளுவர் சைவக்கருத்தை எடுத்தாள்வாரா? அன்றியும் உருவம் ஒன்றுக்குக் குணங்கள் இத்தனை என்றும் வகுப்பரோ?

## இவ்வுரையின் மேல் எழும் ஆத்திக,நாத்திகர் வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** குணம் இல அதாவது பயன் இல்லை என்றீர்கள்! எப்போது?

**உரை ஆசிரியர்:** எண் குணத்தான் தாளை வணங்காத போது.

**ஆத்திகன்:** எது போல?

**உரை ஆசிரியர்:** கெட்டுப் போன பொறிகள் போல, பொறியின் என்பதில் இன் ஐந்தனுருபு. ஒப்புப் பொருள்.

**ஆத்திகன்:** எண் குணத்தான் என்றது சிவபெருமானை அல்லவா?

**உரை ஆசிரியர்:** சிவபெருமான், ஐயப்பன் முதலிய உருவ வணக்கத்தை எதிர்ப்பவர் வள்ளுவர். எண் குணம் என்பது வினைத்தொகை நிலைத்தொடர். எண்ணும் எண்ணிய எண்ணுகின்ற என முக் காலத்தும் விரிவது. எண் என்பது எண் குணம் எட்டுக் குணமன்று.

**நாத்திகன்:** சிவபெருமானை வள்ளுவர் ஆதரித்தார் என்று காட்ட ஆத்திகர் முயல்வது முட்டாள்தனந்தானே?

**உரை ஆசிரியர்:** ஆம் ஆம் ஆம். உங்கட்கு அண்ணன் மார் அவர்கள்.

**நாத்திகன்:** அப்படியானால் நாங்களும் முட்டாள்கள்தாமோ? கடவுள் உண்டு என்பாரை எதிர்ப்பார்களாகிய நாங்களுமா முட்டாள்கள்?

**உரை ஆசிரியர்:** உண்டு என்றும் இல்லை என்றும் சொல்லப்படுவது எது? கடவுள்தானே! எனவே இரு சார்பினரும் கடவுள் எனும் ஒன்றை வைத்துத்தாமே கணக்குப் போடுகின்றார்கள்.!

**ஆத்திகன்:** திருவள்ளுவர்?

**உரை ஆசிரியர்:** அந்தத் தெருப்பக்கம்கூட அடி வைக்கவில்லை. மக்கள் பெறத்தக்கது அறிவு; அதாவது உணர்வு.

**- *குயில், கிழமை இதழ்,* 2. 2. 60**

## 10

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவ னடிசேரா தார்.**

**பி.மா** : இறைவன் அடிசேரா தார் பிறவிப் பெருங்கடல் நீந்தார். (இறைவன் அடி சேர்ந்தார்) பிறவிப் பெருங்கடல் நீந்துவர்.

**பொருள்:** இறைவன் – எங்கும் நிறைந்துள்ள பகவனின், அடி சேராதார் – அடியை எக்காலத்தும் எண்ணாதார், பிறவிப் பெருங்கடல் நீந்தார் – பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கரை சேர மாட்டார்கள். சேர்ந்தார் – இறைவன் அடியை எக்காலும் எண்ணுகின்றவர், நீந்துவர் – பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரையேறுவார்கள்.

**கருத்து:** மனத்தை ஒருவழிப்படுத்தினார் துன்புறுதல் இல்லை.

நீந்தார் என்பதனோடு பிறவிப் பெருங்கடல் என்ற தொடர் சேர்க்கப்பட்டது. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் என்பதற்குத் தக இறைவனடி சேர்ந்தார் என்பது வருவிக்கப்பட்டது.

ஈண்டுப் பிறவி என்றது மாண்டு பிறப்பதையன்று. நொடிதோறும் மிகப் பலவாக வேறுபட்டு வரும் மனக்குறிப்பையே. இவ்வாறு புத்தரும் கூறுகிறார். அதைக் கணிகக் கணக்கு என்பர். முற் பிறப்பும் மறு பிறப்பும் கூறுவோர் சில சமயக் கணக்கர்தாமே

யன்றி எல்லாச் சமயத்தார்க்கும் எல்லா அறிஞர்கட்கும் அஃது ஒப்பமுடிந்ததன்று. வள்ளுவர் எம்மதத்தையும் சார்ந்தவர் அல்லர் என்பதை மறத்தல் கூடாது.

## இக்குறட்பாவின் உரை மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரை ஆசிரியர் விடையும்:

**ாத்திகன்:** பிறவி என்பதற்கு நீவிர் சொல்லும் பொருள் புதுமை யானது அல்லவா?

**ரை ஆசிரியர்:** உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணனுக்கு நோக்காடு என்பதுண்டு. உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணனுக்கு மட்டுமன்று பலர்க்கும் புதுமை யாகத்தான் தோன்றும். பிறப்பென்னும் பேதமை என்றவிடத்து பிறப்பு என்றதற்கு என்ன பொருள்? பிறப்பு என்னும் 'பேதமை' என்றதனால் பிறப்பு என்பது மனம் பற்றியது அல்லவா? அவ்வாறில்லாவிட்டால் பிறப்பாகிய பேதமையை என்பாரா? குழந்தை தாய் வயிற்றினின்று பிறக்கும் பிறப்புக்குப் பேதமை என்று கூறுவாரா? கூறினார் என்றால் பிறப்பு என்பதற்கு வேறு பொருள் உண்டு என்று தோன்றவில்லையா?

இனிப் "**பிறப்பு என்னும் பேதைமை நீங்கிச் சிறப்பென்னும் செம் பொருள் காண்பது அறிவு**" என்பதற்கு மனம் தன்னிலை யில் நில்லாமல் கணந்தோறும் பொருட்களின் மேல் செல்வ தாகிய பிறத் தலாகிய மனப் பிறப்பு ஆகிய பேதைமை நீங்கினால் சிறப்பு என்று சொல்வதோர் செம் பொருளாகிய அறிவை அடைவதே அறிவாகும் என்பதாம்.

'அறிவை அறிவது பொருள்' என்றார் அருணகிரியாரும்.

எனவே பிறவி என்பதற்கு நொடிதோறும் மிகப் பலவாக வேறுபட்டு வரும் மனக்குறிப்பு என்று நாம் பொருள் கூறியது உண்மைப் பொருள் கூறியதேயாகும். அது வள்ளுவர் உள்ளமேயாகும். இறைவனடி சேர்ந்தார்க்கு பிறவியில்லை என்பது இக் குறட்பாவின் கருத்து. பிறவியில்லை - மனக் கோட்டம் இல்லா தொழியும். இவ்வாறாகிய மனம் பொருள்கள் மேற் செல்லுவது ஒரு நாளைக்கு ஒரு முறை யல்ல - ஒரு கணத்துக்குப்

**நாத்திகன்:** இறைவன் என்று கூறுவது கடவுளை அல்லவா?

**உரை ஆசிரியர்:** இறைவன் - இறைந்தவன்; எவ்வுயிரிலும் பரவியவன். அதாவது அறிவு. இதைக் கடவுளுக்கு இட்டுக் கூறினார்கள் என்றால் இறைவன் கடவுளாகிவிடமாட்டார் என்க. இறைவன் என்று மன்னனுக்கும் சொல்வதுண்டு. தன் அதிகாரம் மக்களிடம் இறைந்து பரவி நிற்றலால்.

**நாத்திகன்:** நீந்துதல் என்ன?

**உரை ஆசிரியர்:** பலவாகிய மனக்குறிப்புகளைக் கடல் என்றதற்கு ஏற்ப நீந்துதல் என்று சொன்னார்.

**ஆத்திகன்:** புத்தர் மறுபிறப்பு இல்லை என்றாரா?

**உரை ஆசிரியர்:** இல்லை என்றுதான் சொன்னார்.

**ஆத்திகன்:** பிறப்பு ஒழிய வேண்டும் என்று சொன்னாரே?

**உரை ஆசிரியர்:** அவர் பிறப்பு ஒழியவேண்டும் என்றது வேறு பொருளில். மக்களின் துன்பம் ஒழியவேண்டுமானால் மக்கள் எல்லாரும் பிறவாமல் இருக்கவேண்டும். அதாவது மனிதப் பூண்டே வேரற்றுப் போகவேண்டும் என்றார்.

**ஆத்திகன்:** ஐயையோ, எல்லாரும் செத்துவிட்டால் இவ்வுலகம் என்ன ஆவது?

**உரை ஆசிரியர்:** இன்ப நிலை எய்தும்.

**ஆத்திகன்:** மக்கள் ஒருங்கே தொலைவதும் இன்பமா?

**உரை ஆசிரியர்:** வேறென்ன? எண்ணிப்பார்க்க. பதற வேண்டாம். நீ ஒரு நாளிரவு தூக்கம் வராமல் துன்புற்றிருந்தாய். அது துன்ப மானது என்று நீயே சொன்னாய். நீ ஒரு நாள் நன்றாகத் தூங்கினாய். அடடா நான் இரவு இன்பமாகத் தூங்கினேன் என்றாய். சில மணி நேரம் அயர்ந்து உலகத் துன்பங்களில் சேராமல் தூங்கியதே இன்பம் என்ற நீ நூறு கோடி ஆண்டுகள் அயர்ந்து எத்தொல்லையுமின்றித் தூங்குவது பேரின்பம் என்று சொல்லமாட்டாயா?

***- குயில், கிழமை இதழ், 16.2.1960***

## அதிகாரம் - 2

### வான் சிறப்பு

மழையினது சிறப்புக் கூறுவது. வான் மேலிடம் - அங்குள்ள மழைக்காயிற்று. ஆகுபெயர். மழை என்பது புனலே, புனல் பற்றிக் கூறுதல் பொதுவாகக் கூறுதலாம். அப்புனல், மேற்சென்ற வழி வாழ்வார்க்குப் பயன்படுமாறு கூறுதல் அதன் சிறப்புக் கூறுவது எனப்பட்டது. மேலதிகாரத்தில் உலகின் தோற்றம் கூறினார். இவ்வதிகாரத்தில் தோன்றிய உலகு அற்றொழியாது நிலை நிறுத்தும் மழைச் சிறப்புக் கூறினார் என அறிக.

### 11

**வானின் றுலகம் வழங்கி வருதலாற்**
**றானமிழ்த மென்றுணரற் பாற்று.**

**பி.** : **வான் நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான் அமிழ்தம் என்று உணரல் பாற்று.**

**பொருள்:** வான் - மழையானது, நின்று - நிலையாக நின்று பொழிந்து வர அதனால், உலகம் - உலகின் உயிர்கள், வழங்கி வருதலால் - நிலைபெற்று வருவதனாலே, தான் - அம் மழையானது, அமிழ்தம் என்று - அமிழ்து என்று, உணரல் - உணருதற்குரிய, பாற்று - பான்மையைக் கொண்டிருக்கிறது.

**கருத்து:** மழை, அமிழ்து என்னுந் தன் பெயருக்கேற்ப உலகை நிலைபெறு விக்கிறது.

நிற்க என்னும் செயவெனெச்சம் நின்று என செய்தெனெச்சமாகத் திரிந்தது. இப்பாட்டால் ஆசிரியர் மழையே அமிழ்து என்னும் உண்மையை வற்புறுத்தினார். அமிழ்தமே மழை என்றிருக்கவும் அதை வற்புறுத்திக் கூறுவானேன் எனில் அம்ருதம் என்ற வடசொல்லாற் சொல்லப்படுவதே அமிழ்தென்றும், அதுவே சாவா மருந்தென்றும் மக்களிடைப் பரப்பப்பட்டுள்ள புராணக் கொள்கையை மாற்றி உண்மையை நாட்டவே என்க. அமிழ்து அமிழ் - து என்ற இரு சொற்களால் அமைந்த வினைத்தொகை நிலைத்தொடர். அமிழ் - அமிழ்கின்றது - உணவு. மேனின் றமிழ்கின்ற உணவு காரணப் பெயர்.

**"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்**
**நாமநீர் வேலி உலகுக்கு அவனளி போல்**
**மேனின்று தான் சுரத்தலால்"**

என்ற சிலப்பதிகார அடிகளாலும் மழை மேனின்று வரும் சிறப்பு குறிப்பிடுவதறிக.

இனி மழையே அமிழ்தாயின் ஈண்டு அமிழ்து என்னும் சொல்லாற் குறிப்பிடுவதில் சிறப்பென்னவெனில், வெப்பமானது முகக்கும் நிலையில் அந்நீர், முகில் என்றும், அம்முகில் நீரைக் கொண்டு நின்ற நிலையில் அந்நீர் கொண்டல் என்றும், அக்கொண்டல், மேற்சென்ற நிலையில் அந்நீர் வான் என்றும், அவ்வான் கருமையுற்ற நிலையில் அந்நீர் கார் என்றும் அக்கார் மழைக்கும் நிலையில் அந்நீர் மழை என்றும், அம் மழைதான் வாழ்வார்க்கு அமிழும் உணவாகி அமிழ்ந்து வரும் நிலையில் அமிழ்தென்றும் அவ்வமிழ்து நிலத்தை மருவும் நிலையில் மாரி என்றும் மற்றும் பற்பல நிலைகளில் அந்நீர் பற்பல பெயர் பெறினும் அவற்றில் அமிழ்து என்று கூறப்படும் நிலையே சிறப்பாதல் அறிக.

இப்பாட்டில் அமிழ்து, அமிழ்தம் என அம் சாரியை பெற்றது, குன்றம், மன்றம் என்பவற்றிற் போல. இன்னும் அமிழ்தம் என்பது அமுதம் எனவும் மருவி வழங்கும்.

அம்ருதம் என்பது வடசொல். அது அமிர்தம் அமுர்தம் எனப் பலவாறு மருவி வரும். அம்ருதம், அமிழ்தம் என்ற தமிழ்ச் சொல்லி னின்று இடையில் ஆக்கிக் கொண்ட தெனிற் பொருந்துமே யன்றி உலகு தோன்றியபோது தோன்றிய மழையின் பெயராகிய அமிழ்தம் என்ற சொல் இடையிற்றோன்றிய புராணத்தாற் சொல்லப் படும் அம்ருதத்தினின்று தோன்றியது எனல் பொருந்துவதாகா தென்றுணர்க.

அமிழ்து – சாவா மருந்து, அஃது சாவாமைக்கே அடிப்படையானது. அம்ருதம் அவ்வாறன்று: பகைவனின் வாளைத் தடுப்பதோர் பலகை போன்ற சாவைத் தடுப்பதோர் கருவி என்று கதையில் வரும் சொல். உலகுயிர்க்கெல்லாம் பயனளிப்பதன்றி அம்ருதம் தேவர்க்குப் பயன் படுவதாக இடைக் காலத்திற்கு சொல்லப்படுவது.

அமிழ்து என்ற சொல்லாற் குறிக்கப்படும் பொருள் இதோ என்று (மழையை) இன்றும் காட்டமுடியும். அம்ருதம் என்ற சொல்லாற் குறிக்கப்படுவதான புராணம் கூறும் பொருள் எங்கே?

## இப்பாட்டின் உரைமேல் எழும் ஆத்திக நாத்திகர் வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** கடவுள் எல்லாவற்றையும் படைத்தார் - மழையைப் படைத்தார். அந்த மழையைப் பெய்ய வைத்து உயிர்களைக் காக்கின்றார் என்பதற்கு மாறாகத் திருவள்ளுவர் மழை உயிர்கள் அற்று ஒழியாமல் காக்கின்றது என்றது பிழையல்லவா?

**உரை ஆசிரியர்:** நீ சொல்லுகிறபடி பார்த்தாலும் மழை உயிர்களைக் காக்கின்றது என்பதில் பிழை ஒன்றுமில்லையே. நீ என்ன எண்ணுகின்றாய் என்றால், கடவுளால் படைக்கப்பட்ட மழையைக் கொண்டு கடவுள் உலகைக் காக்கின்றார் என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கவேண்டும் என்பதுதான். கடவுள் இந்த உலகையும் மற்றுமுள்ள உலகங்களையும் படைத்தார் என்பது உனக்குத் தெரியும். அதுமட்டுமா? எல்லா உலகங்களிலும் உள்ள எல்லாவற்றையும் படைத்தார் கடவுள் என்பதும் உனக்குத்தெரியும். மழையையும் கடவுள் படைத்தார் என்பதும் உனக்குத் தெரியும். அந்தக் கடவுள் வைகுந்தத்தில் உட்கார்ந் திருக்கிறாரா, சிவபுரத்தில் உட்கார்ந்திருக்கிறாரா என்பதும் உனக்குத் தெரியும். அதே கடவுள் தெருக்கள் தோறும் உள்ள கோயில்களில் என்ன உருவத்தோடு எத்தனை மனைவி மக்களோடு உட்கார்ந்து கொண்டு என்னென்ன காரியங்களை எவரெவர்களைக் கொண்டு எப்படி எப்படிச் செய்துவருகிறார் என்பவை உனக்குத் தெரியும். கடவுள் தம் அன்பர்களைக் கொண்டு இந்த உலகத்தை எப்படி எப்படி ஆட்டி வைக்கின்றார் என்பது உனக்குத் தெரியும். ஆனால் உன்னிடமுள்ள வீரத் தனத்தையும் காட்டு மிராண்டித் தனத்தையும் திருவள்ளுவரிடத்திலேயும் நாம் எதிர்பார்க்க முடியுமா? மழை பெய்கின்றது, உயிர்கள் வாழ்கின்றன என்பதை - கேள்விக்கு இடமில்லாமல் அறிவுக்குப் பொருத்தமாகத் திருவள்ளுவர் சொல்லத்தான் தெரிந்து கொண்டிருக்கிறார்.

**ஆத்திகன்:** அப்படியானால் கடவுள் இல்லை என்பது வள்ளுவர் கருத்தா?

**உரை ஆசிரியர்:** இந்தக் கேள்விக்கு விடை சொல்லும் படி வள்ளுவர் நமக்கு எதையும் சொல்லவில்லை.

**ஆத்திகன்:** உலக மக்கள் அடையத் தக்கவை இன்னவை என விளக்க வேண்டாமா?

**உரை ஆசிரியர்:** ஆம்! அடையத் தக்கது அறிவு என்று அவர் முழங்கிய முழக்கத்தின் பெயர்தான் திருக்குறள்.

**நாத்திகன்:** அப்படியானால் மழையைக் கடவுள் என்கின்றாரா வள்ளுவர்?

**உரை ஆசிரியர்:** உன் உள்ளத்தில் படிந்துள்ள கடவுள் என்ற ஒரு பெயர் திருவள்ளுவர் உள்ளக்கடலில் எவ்விடத்திலும் தட்டுப் படவில்லை. மக்கள் உயிர் வாழ்க்கைக்கு மழை மிக்க பயன் பட்டு வருகின்றது என்பதுதான் வள்ளுவர் கருத்து. மழை மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்றுதான் அவர் சொன்னார். அப்படிப்பட்ட உட்பொருளை கடவுள் என்பதோடு எந்த இடத்திலும் எப்போதும் பிணைக்க எண்ணியதேயில்லை. அந்த வகையில் அவர் **உன்போன்றவர்** அல்லர்.

**நாத்திகன்:** அமிழ்து மழையா?

**உரை ஆசிரியர்:** வேறென்ன?

**நாத்திகன்:** அமிழ்து இனிமையாயிருக்கும்.. மழை அப்படி இருக்கிறதா?

**உரை ஆசிரியர்:** அமிழ்தில் உள்ளதாக நீ சொல்லும் இனிமையைச் சுவைத்து அறிந்திருக்கிறாயா?அதை அளந்திருக்கிறாயா?

**நாத்திகன்:** தேனமுது, பாலமுது என்னும் போது அமுது இனிமை என்று தோன்றுகிறது. அந்த இனிமையின் அளவும் ஒருவாறு புலப்படுகின்றது. மழையில் அப்படி என்ன இருக்க முடியும்?

**உரை ஆசிரியர்:** தேன் என்றே சொல்லாமல் தேனமுது என்று ஏன் சொல்லவேண்டும். பால் என்று சொல்லாமல் பாலமுது என்று ஏன் சொல்லவேண்டும்! அப்படிச் சொல்லவேண்டிய நிலை எப்படி ஏற்பட்டது? மழை அதாவது இனிமை யானது. இனிமையான ஒரு தனிப்பொருள் கூட்டுக்கறியல்ல. இதுவும் இனிமையுடையதுதான் என்று தேனைக் காட்ட இனிமையுடைய அமுதையும் சேர்க்கின்றார்கள். மழையை அல்லாமல் அமுது ஒன்று தனியாக எங்கும் இல்லை. இனியும் இருக்கப்போவதும் எவ்விடத்துமில்லை.

- *குயில், கிழமை இதழ்,* **23.2.1960**

## 12

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉ மழை.**

**பி. : துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு ஆக்கி**
**துப்பார்க்கு துப்பு ஆய தூஉம் மழை.**

பொருள்: துப்பார்க்கு - உண்பார்க்கெல்லாம், துப்பு ஆய - உயிர்த் துணையாகிய, துப்பு ஆக்கி - சோறு கறி முதலிய உணவுகளை உண்டாக்கி, து - அவ்வுண்ணுதலையுடைய, பார்க்கு - உலகுக்கு, துப்பு ஆய தூஉம் மழை - தானே உண்ணு நீர் ஆகியும் உதவுவது மழையாம்.

கருத்து: உயிர்த் துணையாகிய உணவையாக்கி, உண்ணும் நீருமாகி உதவுவது மழை, து - முதனிலைத் தொழிற் பெயர் து + பார், துப்பார். இரண்டனுருபும் பயனும் உடன்தொக்க தொகைநிலைத் தொடர். துவ்வினையுடைய பார் என விரியும். சோறு முதலியவைகளை ஆக்கினால் மட்டும் அமையாது, உண்ணு நீரும் இன்றியமையாதது என்பார், துப்பாய தூஉம் - மழை என்றார். துப்பாயதூஉம் உயிரள பெடை. பார் உலகின் உயிர்க்கு ஆகுபெயர். முன் உள்ள துப்பார்க்கு வினையாலணையும் பெயர்.

**அரக்கும் பவளமும் ஆயுதப் பொதுவும்**
**துணையும் வலியும் பொலிவும் நெய்யும்**
**அனுபவ மும்தூய் மையும் துப்பாகும்**

***- பிங்கலந்தை, 3656***

என்பதால் துப்பு என்ற சொல்லின்பொருள் இத்தனை என்பது அறிக.

### இவ்வுரையின்மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** மக்களுக்கு ஏற்படும் பயன் பற்றிப் பேசும் போதெல்லாம் கடவுள் நினைவை உண்டாக்க வேண்டும். இதுநம் தமிழ்ச் சான்றோர் கையாண்டு வரும் முறை. இதற்கு முற்றிலும் மாறாக வள்ளுவர் நடக்கலாமா? மக்கட்கு மழை பெரும் பயன் விளைக்கின்றது என்று கூறுவதைவிடக், கடவுள் மழைதந்து மக்களைக் காத்து வருகின்றார் என்றால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

**உரை ஆசிரியர்:** கடவுள் பற்றிய விளம்பரங்கள் குறைகின்றன என்பது உன் கருத்து. அதை எண்ணி எண்ணி இடர்ப்படுகின்றாய், விளம்பரம் இல்லையானால் கடவுள் இல்லாமல் போய்விடும் என்றும் கருதுகின்றாய். காரியம் தொடங்கும்போது கடவுள் பற்றி நினைக்க வேண்டும். நூலொன்று தொடங்கும் போது கடவுள் பற்றி நுவலவேண்டும். கட்டுரைகள் எழுதினால் முதலில் கடவுள் ஒருவர் உண்டு என்பதுபற்றித்தான் எழுதவேண்டும். இதெல்லாம் கடவுள் என ஒரு பொருள் இல்லை என்பதை மனதில் வைத்துச் செய்யப்படும் முயற்சி என்று தோன்றுகிறது. இருக்கும் பொருளைப் பற்றி இருக்கின்றது இருக்கின்றது என்ற முழக்கம் ஏன்? கடவுள் உண்டு என்பதில் ஆத்திகனுக்கு உள்ள ஐயப்பாடு நாத்திகனிடம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆத்திகனே, மழை முதலிய பொருள்களின் பயனை அறிதலில் ஆசையாயிரு! கடவுளை இழுத்து இழுத்துப் போடுவதால் பொருட்பற்றி அறிவதோர் ஆற்றல் ஏற்படாது.

- *குயில், கிழமை இதழ்*, **15.3.1960**

## 13

**விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்**
**துண்ணின் றுடற்றும் பசி.**

**பி.மா. :** **விண் நின்று பொய்ப்பின் விரிநீர் வியன்**
**உலகத்து உண் இன்று பசி உடற்றும்.**

பொருள்: விண் - மழையானது, நின்று - மிகுதியாக இருக்கவும் அது, பொய்ப்பின் - பெய்யாதாயின், விரிநீர்வியன் உலகத்து - விரிந்த நீரையுடைய இந்த அகன்ற உலகத்தின் கண், உண் இன்று - உணவு இல்லாதொழியும் அதனால், பசி உடற்றும் - பசி நோய் துன்புறுத்தும்.

கருத்து: மழையின்றேல் பசி நோய் மிகும்.

விண் - மழை. ஆகுபெயர். விண் என்றாராயினும் விண்ணிற் பெரிதளவு உள்ள மழை முதலைக் கொள்வதால், நின்று செய வென் எச்சத்திரிபு. இவ்வுலகு விரிந்த நீரினையுடையதாயினும் அஃது நிலையான பயன் தந்து நிற்பதன்று என்பார் விரிநீர் வியனுலகத்து உண்ணின்றுடற்றும் பசி என்றார். உலகத்து -

அத்துச் சாரியை ஏழனுருபின் பொருள் தந்து நின்றது. உண் - முதனிலைத் தொழிற்பெயர். உணவுக்கு ஆகியது ஆகுபெயர்.

பசி வந்திடப் பத்தும் பறக்கும் என்பதால் பசி உடற்றும் என்று கூறி மழையின் இன்றியமையாமையை விளக்கினார் இப் பாட்டால்.

## இக்குறட்பாவின் உரைமேல் எழும் ஆத்திக நாத்திகர் வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** விண் என்றது மழையை. நின்று என்றால் என்ன பொருள்?

**உரை ஆசிரியர்:** இருக்க என்பது பொருள். நின்று என்றது நிற்க என்றிருக்க வேண்டும். இவ்வாறு செய்து என வினையெச்சம் செய்து என் வினையெச்சமாகத் திரிவது வழக்கம்.

**ஆத்திகன்:** பொய்ப்பின் என்றால் என்ன பொருள்?

**உரை ஆசிரியர்:** இருக்கும் மழையை என்னிடம் கொஞ்சம் கூட இல்லை என்று பொய்க்குமானால் - என்று பொருள். இருப்பதை இல்லை எனல் பொய்யல்லவா?

**ஆத்திகன்:** இன்னொரு கேள்வி. வருந்த மாட்டீர்கள் என்று எண்ணு கிறேன். அதுதான் விரிநீர் வியனுலகமாயிற்றே, அது மழை பெய்யாவிட்டால் பசித்துன்பத்தையா அடையும்?

**உரை ஆசிரியர்:** காவிரிக்கரையில் அமைந்த ஓரூர் மழை இல்லையே மழையில்லையே என்று கழுதை போலக் கத்தியதை நீ கேட்டதில்லையா? ஏன்? விளைவில்லை. அதனால் நெல்லில்லை. அதனால் உணவு இல்லை. பசித்துன்பம் பொறுக்க முடியவில்லை. விரி நீர் உலகமாக இருந்தாலும் மழையில்லாவிடில் அரோகரா தான் என்று கூறி மழையின் இன்றியமையாமையை வற்புறுத்தினார்.

**ஆத்திகன்:** உண்ணின்று என்பதை உள்நின்று எனப் பிரித்து - பசியானது வயிற்றின் உள்ளே இருந்து கொண்டு துன்புறுத்தும் என்று பொருள் கொண்டால் என்ன?

**உரை ஆசிரியர்:** பசி என்பது வயிற்றின் நிலை வேறுபாடு. அப்படி யிருக்க பசி வயிற்றுக்குள் ஒரு பக்கம் உட்கார்ந்து கொண்டு தொல்லைப் படுத்துவதென்பது எப்படி? அதை விட, மழை யில்லா தொழியு மானால், உணவு இல்லா தொழியும், பசித் துன்பம் உண்டாகும் என்று கூறும் பொருள் நன்றா யில்லையா? உண் இன்று எனப் பிரிக்க, உண் என்பது உணவு என்றும் இன்று என்பது இல்லாதொழியும் என்றும் பொருள் கூறப்பட்டது.

**நாத்திகன்:** விண் என்ற சொல்லை வள்ளுவர் எடுத்தாண்டே இருக்கக் கூடாது. விண்ணை வைத்துத்தான் விண்ணவரை ஆக்கினார்கள். ஆத்திகர்கள். விண், இல்லாத பொருள். விண் என்பது மேலுலகம் என்று புளுகுகிறார்களென்பதும் காண்க. மேலிருப்பதால் மழையை விண் என்றார்கள்.

**உரை ஆசிரியர்:** ஐந்து பருப் பொருள்களில் ஒன்றான விண் என்பது தள்ளத் தக்கது அன்று. அது இங்கு மேல் என்று பொருள்படுவது கொண்டும் தள்ளிவிடுவதற்கில்லை. நீ சொல்லலாம், மேல் என்பதும் கீழ் என்பதும் ஆராயும்போது ஒன்றாகத்தானே முடியும் என்று! உலகினும் பெரிய உள்ளத்தில் மேலும் கீழும் ஒன்றுதான். உலகளவுள்ள உள்ளத்தை வைத்தே இங்கு குடித்தனம் செய்கின்றோம் என்பதை நோக்குக.

*- குயில், கிழமை இதழ்,* **12.4.1960**

## 14

**ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்**

**பி.மா. :** **உழவர் புயல் என்னும் வாரி வளம்**
**குன்றிக்கால் ஏரின் உழாஅர்.**

**பொருள்:** உழவர் - ஊழுவோர், புயல் என்னும் வாரி - மழை என்னும் அரிய வரவு, வளங் குன்றிக் கால் - பயன் குன்றிய இடத்து, ஏரின் உழா அர் - ஏர் கொண்டு உழுதலைச் செய்ய மாட்டார்.

**கருத்து:** மழையின்றேல் உழவு நடவாது.

உழாஅர் - உயிரளபெடை, குன்றியக்கால், குன்றிக்கால் என இடையகரம் குறைந்தது. வாரி - வார்தலின் முதனிலைப் பகுதிப் பொருள் இறுதி நிலை இகரம் பெற்றது. வாரி என்பதை வடசொல் என்று கூறுவாரும் உளர். அவர்.

**"வார்தல், போகல், ஒழுகல் மூன்றும்,**
**நேர்பும் நெடுமை யும் செய்யும் பொருள"**

*- தொல்; உரி, 21*

என்பதால் வாரி தூய தமிழ்ச் சொல்லாதல் அறியார்.

## ஆத்திகரும் நாத்திகரும் இச்செய்யுள் உரையின் மேல் எழுப்பும் வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** அவனன்றி ஓரணுவும் அசையாதெனும் பெரிய ஆப்தர் மொழி ஒன்று கண்டாய் என்ற தமிழ்ச் சான்றோர் மொழிக்கு மரியாதை காட்டப்பட வேண்டுமே என்பதுதான் என் கேள்வி.

**உரை ஆசிரியர்:** அது முட்டாள்தனமான கேள்வி என்பதுதான் என் விடை

**நாத்திகன்:** இவ்வுரையின் கருத்தால் மக்கள் ஆற்றல் குறைத்து எடை போடப்படுகிறது. என்ன? மழை இல்லா விட்டால் உழவு நடவாது என்றால், அண்டை அயலில் உள்ள ஏரி குளங்களிலுள்ள தண்ணீரை இறைத்துக் கொள்ளலாம் அன்றோ?

**உரை ஆசிரியர்:** மிக்க அறிவாளி! மழை இல்லையானால் அண்டை அயலில் உள்ள ஏரியிலும் குளத்திலும் மட்டும் தண்ணீர் இருக்குமோ?

**ஆத்திகன்:** புயல் என்பதன் பொருள் என்ன?

**உரை ஆசிரியர்:** புய்த்தல் பிறவினை, புய்தல் தன்வினை, புய்தல் - ஓரிடத்தினின்று விரைவாகப் புடை பெயர்தல் - ஆகு பெயராய் மழையை உணர்த்திற்று. இது இழிவழக்காய் பிய்த்தல் என வழங்கும். புய் என்பதின் அடியாகப் புயல் தோன்றியது. புயல் எனினும் புய்த்தல் எனினும் ஒன்றே. மழையானது விரைந்து அடிக்கும் நிலையில் அதைப் புயல் என்று சொல்ல வேண்டும். புயல் இன்றியமையாச் சொல்.

**நாத்திகன்:** புயல் என்று கூறி அமையாது புயல் என்னும் வாரி என்றது ஏன்?

**உரை ஆசிரியர்:** விரைந்து அடிக்கும் மழையாயினும் அது வேண்டா இடத்துச் சிதறாமல் வேண்டும் வழி வருதலைக் குறிக்க வேண்டும் ஆதலின் புயலென்னும் வாரி என்றார்.

***- குயில், கிழமை இதழ், 10.5.1960***

## 15

**கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**
**யெடுப்பதூஉ மெல்லா மழை.**

**பி.மா.:** **கெடுப்பதூஉம் மற்று ஆங்கே கெட்டார்க்குச் சார்வு ஆய் எடுப்பதூஉம் எல்லாம் மழை.**

**பொருள்:** கெடுப்பதூஉம் - பெய்யாது உலகில் வாழ்வாரைக் கெடச் செய்வதும், மற்று ஆங்கே - அஃதன்றி அவ்விடத்து, கெட்டார்க்கு சார்வு ஆய் - அவ்வாறு கெட்டவர்க்குத் துணையாகி, எடுப்ப தூஉம் - பெய்து கைதூக்கி விடுவதும் ஆகிய, எல்லாம் மழை - அனைத்தும் மழை.

**கருத்து:** பெய்யாது கெடுப்பதும் பெய்து வாழ்விப்பதும் மழை பெய்யா விடத்து மக்கள் கேடுறுவதும் பெய்த விடத்து நலமுறுவதும் ஆகிய மழையினதாற்றல் விளக்கியவாறு. கெடுப்பதூஉம், எடுப் பதூஉம் உயிரளபெடைகள். மற்று வினைமாற்று. இயற்கையின் கொடையாகிய மழை மக்களுக்குத் தீமை செய்யவேண்டும் என்றோ நன்மை செய்யவேண்டும் என்றோ எண்ணிப் பெய்வதும் பெய்யா தொழிவதும் செய்யாது எனினும், மழையால் மக்கள் அடையும் நலம், தீது கருதி அதைக் கெடுப்பது எடுப்பது என்கின்றார் என்பது இங்கு அறிதல் வேண்டும்.

### இவ்வுரை மீது எழும் ஆத்திக, நாத்திகர் கேட்டலும் உரை ஆசிரியர் கிளத்தலும் வருமாறு:

**ஆத்திகன்:** படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலும் உடையவர் கடவுள் ஒருவரே. இச்செய்யுளின்படி காத்தலும், அழித்தலும் மழையால் முடியும் என்றாகிறது. இவர் செய்துள்ள மற்றச் செய்யுளால் படைத்தலும் செய்கின்றது மழை! இது எவ்வாறு பொருந்தும்?

**உரை ஆசிரியர்:** மழை பெய்யாவிட்டால் புல்லும் முளையாது, மழை பெய்யாவிட்டால் மக்கட்குக் கேடு உண்டாகும். மழை பெய்தால் மக்கள் அடைந்த கேடு ஒழியும் என்பதில் கடவுள் பற்றிய மறுப்பு ஏதாகிலும் உண்டா? குற்றி நட்டுத் தடுக்கி விழுகின்றீரே.

**நாத்திகன்:** மழைகெடுக்கும் எடுக்கும் என்றுகூறி அறிவற்ற பொருளை அறிவுடைய பொருள்போல் கூறியது சரியா? அறிவில்லாத

உருவங்களை அறிவுடையனவாகக் கூறுவது அறிவுக்குப் பொருந்தாத உருவ வணக்கத்தை ஆதரிப்பதாகாதா?

**உரை ஆசிரியர்:** ஆகாது. பேசாத ஒன்றைப் பேசுவது போலவும் வராத ஒன்றை வருவது போலவும் அறியாத ஒன்றை அறிந்தது போலவும் வைத்துச் செய்யுள் செய்வதென்பது கவிமரபு!

**- *குயில், கிழமை இதழ்,* 31.5.1960**

## 16

**விசும்பிற் றுளிவீழி னல்லால்மற் றாங்கே**
**பசும்புற் றலைகாண் பரிது.**

**பி.மா : பசுமைபுல் தலை விசும்பின் துளிவீழின் அல்லால் மற்று ஆங்கே காண்பு அரிது.**

**பொருள்:** பசுமை புல்தலை - பசும்புல்லின் தலையையும், விசும்பின் துளி வீழின் அல்லால் - மழையின் துளி மண்ணில் வீழ்ந்தா லல்லாது, மற்று - வேறு வகையால், ஆங்கே - அவ்விடத்து, காண்பு அரிது - காண முடியாது.

**கருத்து:** மழையின்றேல் ஓரறிவுயிராகிய பசும்புல்லும் உண்டாதல் இல்லை.

விசும்பு-மழை, ஆகுபெயர். மற்று - வினைமாற்று, தலையும் என வரவேண்டியது தலை என நின்றது. இழிவு சிறப்பு உம்மை தொக்கது. மக்கள் கெடுதலேயன்றி ஓரறிவுயிராகிய புல்லும் தலை யெடாது என்பார், பசும்புல் தலை காண் பரிது என்றார். ஓரறிவுயிரைக் குறித்தார் எனினும் ஈரறிவுயிர் முதலியவை களையும் கொள்ள வேண்டும். பசுமை புல்-பசும்புல். பசுமையின் ஈறுகெட்டு இனமிக்கது. விசும்பின் ஐந்தாவதின் இன் உருபு நீங்கற் பொருளில் வந்தது. காண்பு தொழிற் பெயர். பு, தொழிற் பெயர் இறுதி நிலை. அரிது, இன்மை குறித்தது.

### இவ்வுரைமீது எழும் ஆத்திக நாத்திகர் கேட்டலும் உரை ஆசிரியர் கிளத்தலும் வருமாறு:

**ஆத்திகன்:** விசும்பு மழையா?

**உரை ஆசிரியர்:** விசும்பு ஆகு பெயராய் மழையைக் குறிக்கும் என்று கூறியுள்ளேன்.

**ஆத்திகன்:** விண் என்பதும் மழைதான் எனப்பட்டது. எனவே மேலே மழைக்கு ஆதாரமானதோர் நீர் இருப்பு உண்டோ?

**உரை ஆசிரியர்:** உண்டு.

**ஆத்திகன்:** அது யாரால் உண்டாக்கப்பட்டது?

**உரை ஆசிரியர்:** ஒன்று உண்டு என்றால் அதை ஆக்கிய பொருள் ஒன்று இருக்கவேண்டும் என்பது உம் கருத்தா?

**ஆத்திகன்:** வேறென்ன?

**உரை ஆசிரியர்:** சரி, ஒரு பொருள் உண்டு என்றால் அதை ஆக்கிய ஒரு பொருள் இருக்க வேண்டும். ஆக்கிய பொருள் ஒன்று உண்டு என்றால் அதை ஆக்கிய பொருள் ஒன்று இருக்க வேண்டுமே! நீர் கேட்டதும் ஒரு கேள்வியா? உலகு என்றுமிருப்பது; அவ் வுலகின் ஒரு பகுதி விண்.

**ஆத்திகன்:** விண் உலகின் ஒரு பகுதியா?

**உரை ஆசிரியர்:** ஆம்! உலகம் என்பது நீயிருக்கும் தரை மட்டுமன்று. அதைச் சுற்றியுள்ள வெளியும் இவ்வுலகைச் சேர்ந்ததே.

**நாத்திகன்:** பசும்புல் தலை என்றால், பசும்புல் முளைக்க ஆதாரமான பசும்புல் மூலம் என்பது பொருளல்லவா?

**உரை ஆசிரியர்:** அவ்வாறும் கொள்க.

- ***குயில், கிழமை இதழ், 7. 6. 1960***

## 17

**நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி**
**தானல்கா தாகி விடின்.**

**பி.மா.:** **எழிலி தடிந்து தான் நல்காது ஆகிவிடின்**
**நெடுமை கடலும் தன் நீர்மை குன்றும்.**

பொருள்: எழிலி தான் - முகிலானது, தடிந்து - மின்னி, நல்காது ஆகிவிடின் - மழை தராதாகிவிட்டால், நெடுமை கடலும்- நீரான் மிக்க கடலும், தன் நீர்மை - தனது நீரின் மிகுதித் தன்மை, குன்றும் - குறையும்.

கருத்து: மழையின்றேல் பெருங்கடலும் தன் மிகுதித் தன்மை குறையும்.

நீர்மை- நீரின் தன்மை. அஃதாவது நீரினது மிகுதித் தன்மை. நீரின் இயல்பு குறைதலாவது, அதன் கண்ணுள்ள நீர் வாழுயிர்கள் பிறவாமையும், மணி முதலாயினபடாமையுமாம் என்று பொருள் கூறுவாரும் உளர். அது பொருந்தாது. நீரின் தன்மை பற்றியே இங்குப் பேச்சே தவிர அதற்கு அப்பாற்பட்ட உயிர் முதலியன பற்றியன்று. நீர் மிகுதித் தன்மை குறையாவிடில், உயிர், மணி குறைதலில்லை என்பதையும் குறிக்கவே, நீரின் மிகுதி அளவில் குறையும் என்றார். தான் - அசை, தடிதல் - மின்னுதல், எழிலிக்கு இயற்கை அடையாய் நின்றது. கடலே நீர் முதன்மையன்று. கடலுக்கு நீர் முதன்மை மழை என்றதோர் உண்மையை இப்பாட்டால் விளக்கினார்.

## இவ்வுரை மீது எழும் ஆத்திகர் நாத்திகர் கேட்டலும் உரை ஆசிரியர் கிளத்தலும் வருமாறு:

**நாத்திகன்**: கடலோ நெடிது, நிறைத் தண்ணீர் இருக்கின்றது. அப்படிப் பட்ட பெருநீரும், மழை பெய்யாவிட்டால், அளவிற் குறையும் என்பது இக் குறட்பாவின் கருத்து. மழை பெய்யாவிட்டால் கடல் நீரே இல்லாமற் போய்விடும் என வள்ளுவர் கருதினார். இது கொண்டு எண்ணினால், கடல்கட்கும் ஆதாரமாக விண்ணில் ஒரு பெரு வெள்ளம் இருக்கிறது என்றாகிறது. அதனால், நாம் வாழும் இந்த உலகம் பெருவெள்ளத்தை வைத்திருக்கும் விண்ணால் வாழ்கின்றது என்றாகிறது. சில சமைய நூல்கள் விண்ணுலகு நாம் பெறத்தக்க பேறு, மண்ணுலகில் பிறந்ததன் பயன் விண்ணுலகை அடைவதே என்று கூறுவதில் உண்மை யிருக்கின்றதாகக் கொள்ள வேண்டுமா?

**உரை ஆசிரியர்**: விண்ணுலகு என ஒன்றில்லை. அது ஆத்திகர் விட்ட கரடிதான். ஆனால், உலகுக்குச் சொந்தமான- உலகோர் பிரித்து எண்ணப்படாத ஒரு மண்டிலம் இருக்கிறது. அங்குக் கடலுக் காதாரமான வெள்ள இருப்பு இருக்கலாம் - இருக்கின்றது. அப்படி யிருந்தால், அதைத் தேடி வைத்திருப்பது விண்ணுலகா? இல்லை உலகந்தானே? ஆதலால், இல்லாத விண்ணுலகை மக்கள் பெறத் தக்கது என்பது பொய்யின்மேல் அடித்த ஆணி!

**நாத்திகன்**: அப்படி ஒரு வெள்ளக்காடு இருக்கத்தான்வேண்டும் என்பதற்கு ஆதாரம் என்ன? அந்த வெள்ளக் காட்டுக்குக் காரணம் கடவுள் என்பதை மறுப்பதெப்படி?

**உரை ஆசிரியர்:** நீர் கேட்ட இரண்டில் கடைசிக் கேள்விக்குப் பன்முறை பதில் சொல்லப்பட்டாய்விட்டது.

கடலுக்காதாரமான வெள்ளக்காடு உண்டு என்பதற்குத் திருவள்ளுவரின் இத்திருக்குறள் சான்று. மற்றொன்று எண்ணிப் பார்க்கவேண்டும். இவ் வுலகு, நீர், நெருப்பு, காற்று, மண்,வெளி என்ற ஐந்து பருப் பொருள்களால் ஆனது. அவற்றில் நீர் என்னும் பருப்பொருள் கடல் மட்டுமல்ல; உம் வீட்டு அண்டாவில் நிறைந்துள்ள நீர் மட்டுமல்ல என்பதை நீவிர் உற்றுணரவேண்டும். கடலுக்கு அப்பாலாகவும் நீர் உண்டு என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

**- குயில், கிழமை இதழ், 14. 6. 1960**

## 18

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.**

**பி.மா.:** **வான் ஒர்க்கும் ஈண்டு வானம் வறக்குமேல்**
**சிறப்பொடு பூசனை செல்லாது.**

பொருள்: வான் ஓர்க்கும் - மேல் நோக்கி (மழை வரவை) ஆராயும், ஈண்டு - இவ்வுலக மக்கட்கு, வானம் - மழை, வறக்கு மேல் - பெய்யாவிடில், சிறப்பொடு- விழாவுடன் கூடிய, பூசனை- பூசனையானது, செல்லாது - நடவாது.

**கருத்து:** மழையின்றேல் விழா முதலிய நடைபெறமாட்டா.

சிறப்பொடு பூசனை என்பதை, இக்காலத்தில், கல்லையும் செம்பையும் காட்டி மடமையையும், கலகத்தையும் வளர்த்து வரும் கோயில்கள் என்பவற்றில் நடைபெறும் விழாவுடன் கூடிய பூசனை என்று மக்கள் நினைக்கும் வண்ணம், நித்திய நைமித்தியங்கள் என்ற சொற்களைப் பயன்படுத்திக் காட்டுவார் பரிமேலழகர் தம் உரையில். சிறப்பொடு பூசனை என ஆசிரியர் சொன்னது எதை?

**வன்கண் மறமன்னன் வாண்மலைந்து மேம்பட்ட**
**புன்தலை ஒள்வாள் புதல்வன்கண்டு- அன்புற்றுக்**
**கான்கெழு நாடு கொடுத்தார் கருதார்க்கு**
**வான்கெழு நாடு வர.**

*- தொ; புற. 5 மேற்கோள்*

மன்னன் புதல்வன் வாட் போரிட்டு மேம்பட்டான். அம் மேம்பாடு கண்டு மக்கள் அன்புற்றார், அதனால் அவனை நாடாளச் செய்தார். அப்போது நடக்கின்றதோர் விழா. விழா - சிறப்பு.

**காப்பு நூல் யாத்துக் கடிகமழ் நீராட்டிப்**
**பூப்பலி பெய்து புகைகொளீஇ - மீப்படர்ந்த**
**காளை நடுகற் சிறப்பயர்ந்து க்ால் கொண்மின்**
**நாளை வரக்கடவ நாள்.**

*- தொ; புற.5. மேற்கோள்*

தமிழ் மறவன் தனிநின்று போராடிப் பருவுடல் நீத்துப் புகழுடன் நிறுவினான். அவனுக்கு நடுகற் சிறப்பும் பூசனையும் செய்ய நாள் குறித்தார். அஃதோர் சிறப்பொடு பூசனை, பூசனை - தூய்மை செய்தல், பூசு முதனிலை, ஐ தொழிற் பெயர் இறுதி நிலை, அன் சாரியை.

**அன்றுகொள் ஆபெயர்த் தாரமரில் வீழ்ந்தோற்கு**
**இன்று கொள் பல்லான் இனமெல்லாம் - குன்றாமல்**
**செய்ம்மினோ சீர்ப்பச் சிறப்பாகத் தீபங்கள்**
**வைம்மினோ பீடம் வகுத்து.**

*- தொ.புற. 5 மேற்கோள்*

இதுவும் அது.

மற்றும் பகைவரின் ஆனிரை கவர்ந்து மீண்ட மறவர் நடத்துவது முதலிய சிறப்பொடு பூசனையையே குறித்தது இச்செய்யுள், இதை மறைக்கும் எண்ணத்தோடு கல்லிலும் செம்பிலும் கடவுளைக் காட்டும் பொல்லா நெறி குறித்ததாகப் புகல்வார் உரை, துகளுரையாம் என விடுக்க. உருவ வணக்கத்தைத் தூற்றுவாராகிய திருவள்ளுவர் அதைப் போற்றுவாரா? எண்ணிப் பார்க்க! வான் ஓர்த்தல்- மேல் நோக்கி (மழை பற்றி) ஆராய்தல் என்று பொருள் கூறப்பட்டது. ஓர்த்தல் - ஆராய்தல். "ஓர்த்துள்ளம் உள்ளது உணரின்" (குறள் 357) என இவ்வாசிரியரே கூறியமை காண்க.

ஓர்க்கும் - உம்மீற்றுப் பெயரெச்சம், நிகழ் காலத்தது.

வான் ஓர்த்தலாவது: வெள்ளி, கரும் பாம்பு, செம்பாம்பு, அறிஞன், ஆகிய கோள்களோடு மதி கூடினால் மழை உண்டாகும். ஆதலின் அக்கோள் நிலை நோக்கி ஆராய்தலாம்.

**வைகாசித் திங்கள் மதிகுறைந்த நாலாம் நாள்**
**பெய்யுமே யாயிற் பெருமையாம் - பெய்யாக்கால்**
**ஏரி குளமும் எழிற்கிணறும் நீர்வற்றும்**
**பாரில் மழையில்லை பார்.**

இது கருதியும் மேனோக்கி ஆய்வர். வானம் - மழை, ஆகுபெயர்.

## இக்குறட்பாவின் உரைமேல் எழும் ஆத்திகர் நாத்திகர் வினாவும், உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** பூசனை என்பது பூஜா என்ற வடசொல்லின் சிதைவல்லவா?

**உரை ஆசிரியர்:** சொன்னவர் யார்?

**ஆத்திகன்:** வடசொற்காரர் சொல்கின்றார்கள்.

**உரை ஆசிரியர்:** யாரிடத்தில்?

**ஆத்திகன்:** என்னிடத்தில்.

**உரை ஆசிரியர்:** நீர் வடவரின் அடியார் என்பதைக் கருதித்தாமே?

**ஆத்திகன்:** தமிழர் என்று கருதியே.

**உரை ஆசிரியர்:** நீர் தமிழர் என்பது மெய்யானால் அவரைச் சும்மா விட்டனுப்பியிருக்க மாட்டீரே?

**ஆத்திகன்:** என்ன செய்யமுடியும்?

**உரை ஆசிரியர்:** குறைந்த அளவில் அவருக்கு விடையாவது கூறி யிருக்கலாமே?

**ஆத்திகன்:** என்ன என்று?

**உரை ஆசிரியர்:** எம் தமிழ்ப் புலவர்கள் பூசனை என்பது தமிழ் என்றும், மேலும் காரணப் பெயர் என்றும் கூறி விளக்கியிருக்க நீர் இப்படிப் பேசுவது தீய செயல் ஆகும் என்று.

**நாத்திகன்:** வானை நோக்கியிருக்கும் இவ்வுலகத்தில் மழையில்லா விட்டால் ஒன்றும் நடவாது என்று மொத்தமாகக் கூறாமல் சிறப்பையும், பூசனையையும் இழுத்துப் போடுவது ஆத்திகப் போக்கையே காட்டுகின்றதல்லவா?

உரை ஆசிரியர்: சிறப்பையும் பூசனையையும் திருவள்ளுவர் இழுத்துப் போட்டுத்தாம் நும் பண்டைத் தமிழக மேன்மையை உமக்குக் காட்ட எண்ணியருளினார் வள்ளுவர் என்க.

- *குயில், கிழமை இதழ்,* **21. 6. 1960**

## 19

**தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா தெனின்**

**பி.மா.: வியன் உலகம் வானம் வழங்காது எனின் தானம் தவம் இரண்டும் தங்கா.**

பொருள்: வியன் உலகம் - அகன்ற உலகின் கண், வானம் வழங்கா தெனின் - மழை பெய்யாவிட்டால், தானம் - தானமும், தவம் - தவமும் ஆகிய இரண்டும் - இரண்டறங்களும், தங்கா - நிலைபெறமாட்டா.

**கருத்து:** மழையின்றேல், தானமும் தவமுமாகிய அறங்கள் நடைபெறா.

தானம் - இல்லார்க்கு உள்ளார் மனமுவந்தளிப்பதோர் பண்பு. தானம் - தன்மையின் - மை இறுதி கெட்டு முதல் நீண்டு அம் இறுதி நிலைபெற்றது. பசுமை, பசு, பாசி; கொடுமை, கொடு, கோடு, கோட்டம் என்பவை போல.

**ஈறு போதல் இடையுகரம் இய்யாதல்**
**ஆதி நீடல் அடியகரம் ஐயாதல்**
**தன்ஒற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்**
**இனமிகல் இனையவும் பண்பிற் கியல்பே**

*- நன்; சூ. 136*

என்பதால் மையீற்றுப் பண்பு வேறுபடும் வகை அறிக. தானம்: தூய தமிழ்ச்சொல். இதை வடமொழியென்று கூறுவர். இதேபோன்ற ஓசையுடைய மற்றொரு சொல் வடமொழியில் இருக்கலாம். அது இது வன்று. மற்றும், தானம் என்ற தமிழ்ச் சொல்லை வடவர் எடுத்தாண்டு மிருக்கலாம், சொல் வறுமைப்பாடு உடைய வந்தேறிகள் ஆனதால். தவம் - தவ: மிகுதிப் பொருள் தருவதோர் உரிச்சொல். அது பிறர்பால் எழும் அருள்மிகுதியைக் குறித்தது. தவ என்பது, இழி வழக்கமாக மகர இறுதிபெற்றது. எது போல வெனில், சட்ட என்ற செம்மைப் பொருட் டாவதோர் அகர ஈற்று இடைச்சொல் இழிவழக்காக மகர ஈறு பெற்றமை

போல. இவ்வாறு சிவஞான போத உரையாசிரியரும் கூறினார். இதை தபஸ் என்ற வடசொல்லின் சிதைவு என்று அறியாது கூறுவாரும் உளர்.

**உறுதவ நனிஎன வரூஉம் மூன்றும்**
**மிகுதி செய்யும் பொருள என்ப.**

*- தொ; உரி.3*

என்பதால் தவ என்ற சொல் மிகுதிப் பொருள் தருவது அறியப்படும்.

## இக் குறட்பாவின் உரைமேல் எழும் ஆத்திகர், நாத்திகர் வினாவும், உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** தானமும் தவமும், அடுத்த பிறவியில் எதிர் பார்க்கப்படும் சிவபெருமானின் சீபாதம் கருதியல்லவா?

**உரை ஆசிரியர்:** அப்படித்தான் மடத்தார் வெளியிட்ட மடவுரை வரைந்தது. அதைவிட்டு இவ்வுரையை ஊன்றிப் படிக்க! பிறந்தவன், இறந்தபின் மீண்டும் பிறப்பான் என்பதும், சிவபெருமான் என்பதும், சீபாதம் என்பதும் சமையக்கணக்கர் திரிக்கும் கயிறு. பெறத்தக்கது மெய்யுணர்வு என்றார் வள்ளுவர்.

**நாத்திகன்:** தானம் என்பதும் தவம் என்பதும் ஆத்திகர் பேச்சுக்கள் அல்லவா?

**உரை ஆசிரியர்:** அவை ஆத்திகர் பேச்சுக்களும் அல்ல; நாத்திகர் பேச்சுக்களும் அல்ல. அவை தூய தமிழ்ப் பேச்சுக்கள். தானம் என்பது தன்மை என்ற பொருள் உடையது. அது பண்பாகு பெயராய்க் கொடைக்கு ஆயிற்று. தவம் என்பது பற்றிய விளக்கத்தையும் உரையிற் காண்க.

*- குயில், கிழமை இதழ்,* **28. 6. 1960**

## 20

**நீரின் றமையா துலகெனின் யார் யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு**

**பி.மா.:** **உலகு நீர் இன்று அமையாது எனின் யார் யார்க்கும்**
**ஒழுக்கு வான் இன்று அமையாது.**

நீர் இன்று அமையாது - நீர் இன்றி நிலை
ன் - என்றால், ஒழுக்கு - ஒழுக்கம், யார்
ப்பட்டவர்க்கும், வான் இன்று - மழை
ாது - நிலைபெறாது.

ழுக்கம் நிலையாது.

**விசும்பொடு ஐந்தும்**
**கம்**

*- தொ. மரபு. 89*

ு உலகு என்றார். வானின்று அமையா
ழையில்லாவிடில் மழை யொழுக்கு இராது
அவர் பொருள் சிறவாமை உணர்ந்திலர்.
ல இவ்வாசிரியர் கூறிய.

**ாத பேராண்மை சான்றோர்க்**
**ஒழுக்கு.**

*- பிறனில் விழையாமை 8*

. மணக்குடவரும் இவ்வாறே பொருள்
றந்ததாக ஓம்பப்படும் ஒழுக்கம் போலும்
து எனப் பொருட் பெற்றி உணர்த்துவார், யார்
தொழுக்கு என்றார். இன்று - இன்றி, எதிர்
ச்சம்.

## ன் மேல் எழும் ஆத்திகர் நாத்திகர் வற்றிற்கு உரை ஆசிரியர் தரும் டையும் வருமாறு:

ழக்கம் நிலைபெற்றுவிடுமா? நீரினால் உலகு
ா?

ம் என்பது இல்லறமோ துறவறமோ பற்றி
து கொள்வது அன்று. மழையில்லாமல்
ல்லாமல் உலகம் நிலை பெறாதல்லவா? நீ
இல்லாமல் எதுவும் நடக்காது என்று, சொல்லிக்
ால் தொல்லை என்பதெல்லாவற்றையும்
, மடத்தம்பிரான் முதலியவர்களைப்





போல! ஆனால்
உண்மைக்கு ஒத்
தில் மட்டும் வரா

**நாத்திகன்:** மழை இருந்
வள்ளுவர் கட
அவ்வாறு கூறா

**உரை ஆசிரியர்:** எ
அதையே அவ
என்று கூறினா
சொல்லை அவ

**ஆத்திகன்:** இவ்வாறு
கடவுளின் நீர் இ
யமையாதது என்

**உரை ஆசிரியர்:** நா
மழையால் ஒழு
சொன்னதாகே
வள்ளுவரிடம் ம
ஆத்திகனோ ந
வேண்டும் என்ட

---

ப-ர்.: இவ்வதிகாரத்தா
இன்றியமையாத ப

போல! ஆனால் யார் மனத்தையும் புண்ணாக்க எண்ணாது உண்மைக்கு ஒத்த வகையில் செய்யுள் செய்த வள்ளுவரிடத்தில் மட்டும் வராதே; வாலாட்டாதே.

**நாத்திகன்:** மழை இருந்தால் வாழலாம் என்று மட்டு மன்றியமையாமல் வள்ளுவர் கடவுள் வேண்டாம் என்று கூறியிருக்கலாம். அவ்வாறு கூறாமை என்ன?

**உரை ஆசிரியர்:** எதில் அவர் மாட்டிக் கொள்ளவில்லையோ அதையே அவர் ஒத்துக் கொள்வாரா? கடவுள் வேண்டாம் என்று கூறினால் என்ன பொருள்? கடவுள் என்பதொரு சொல்லை அவர் ஒத்துக் கொண்டதாகி விடாதா?

**ஆத்திகன்:** இவ்வாறு செய்யுள் செய்தார் திருவள்ளுவர் என்றாலும் கடவுளின் நீர் இன்றியமையாதது. கடவுளின் வான் (மழை) இன்றி யமையாதது என்று கூறியதாகத் தானே கொள்ள வேண்டும்?

**உரை ஆசிரியர்:** நாத்திகன் நவிலுவான்: நீரால் உலகமையும், மழையால் ஒழுக்கமையும், கடவுள் இல்லை என்று வள்ளுவர் சொன்னதாகவே கொள்ள வேண்டும் என்பான். எவனும் வள்ளுவரிடம் மாட்டிக்கொண்டு தொல்லையடைய வேண்டாம். ஆத்திகனோ நாத்தகனோ மனிதர்போல் நடந்துகொள்ள வேண்டும் என்பதே வள்ளுவர் கொள்கை என்க.

**- *குயில், கிழமை இதழ்,* 5.7.1960**

---

**ப-ர்.:** இவ்வதிகாரத்தால், தோன்றிய உலகுயிர்கள் நிலை பெறுவதற்கு இன்றியமையாத மழையின் சிறப்பை விரித்துரைத்தருளினார்.

# அதிகாரம் - 3

## நீத்தார் பெருமை

அஃதாவது துறந்தாரது பெருமை கூறுவது. மழையால் நிலை நின்றனர் உலக மக்கள்; அது போதியதன்று. அவர்கள் அறம் உணர்ந்து ஒழுகல் வேண்டும். அதற்கு அறநூல் வேண்டுமன்றோ? அஃது இயற்றி யருளும் ஆற்றல் இல்லந் துறந்தார்க்கே அமைவது, இஃது அறம், இஃது மறம் என்று துணிவதோர் துணிவு அவர்க்கே உண்டாதலின்.

அறப் பனுவலின் உயர்வு அதன் ஆசிரியர் ஆற்றலின் உயர்வையே பொறுத்தது ஆதலின், நீத்தாரது நூற் பெருமை எனப்படாமல் நீத்தார் பெருமை என்றே கூறப்பட்டது.

### 21

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவற் றுணிவு.**

**பி.மா.:** **ஒழுக்கத்து விழுப்பத்து நீத்தார் பெருமை**
**வேண்டும் பனுவல் துணிவு.**

பொருள்: ஒழுக்கத்து - உலக மக்களின் ஒழுக்கத்து பொருட்டும், விழுப்பத்து - மேன்மையின் பொருட்டும், நீத்தார் பெருமை - இல்லந்துறந்த தமிழ்ச் சான்றோரின் பெருமை என்னெனில், வேண்டும் - வேண்டப்படுகின்ற, பனுவல் துணிவு - நூலில் இது அறம், இது மறம் என்று அவர் துணிந்த துணிவேயாகும்.

கருத்து: நீத்தார் பெருமை, அவரின் பனுவற்றுணிவால் ஏற்பட்டது.

ஒழுக்கத்து, விழுப்பத்து என்பவற்றின் அத்துச்சாரியைகள் நான்கனுருபின் பொருள் தந்து நின்றன. இவ்வாறே பொருள் கொண்டார் மணக்குடவரும். வேண்டும் பெயரெச்சம்; மக்கள் விரும்புகின்ற என்ற பொருள். இதில் மக்கள் அவாய் நிலையாற் கொள்க.

நீத்தார் - துறந்தார். துறத்தல் இருவகை: இல்லந் துறத்தல், உள்ளந் துறத்தல். இவ்வாறு பட்டினத்து அடிகளும் பகர்ந்தார்.

அது வருமாறு:

**அறந்தான் இயற்றும் அவனிலும் கோடி அதிகம் இல்லம்**
**துறந்தான் அவனிற் சதகோடியுள்ளத் துறவுடையான் ... ...**

**இல்லத்துறவாவது:** மனை மக்களின் நலத்தையும், தன் நலத்தையும் துறந்து மக்கள்பால் அருள் உள்ளம் துறவாத நிலை. இதுவே இங்குக் கூறிய நீத்தார் நிலை என்க. மற்ற உள்ளத் துறவு உலகுக்குப் பயன்படாது. அவர் அறப்பனுவல் செய்வது யாங்ஙனம்? உள்ளத்தையும் துறந்த நிலை செயலுக்கு ஏற்றதாகாது.

## இக்குறள் உரையின் மேல் எழும் ஆத்திகர், நாத்திகர் வினாக்களும் அவற்றிற்கு உரை ஆசிரியர் தரும் விடையும் வருமாறு:

**நாத்திகன்:** ஆத்திகத்தில் ஒழுக்கம் காண முடியுமா?

**உரை ஆசிரியர்:** நாத்திகத்திலும் ஒழுக்கம் இருக்க முடியுமா? ஆனால் திருவள்ளுவரால் ஒழுக்கம் இன்னதென்று நல்ல முறையில் கூறப்பட்டிருப்பது காண்க.

**ஆத்திகன்:** மக்களின் ஒழுக்கத்திற்காகவும் மேன்மைக்காகவும் இல்லத் துறவை மேற்கொண்டவர்கள், ஒழுக்கத்தின் மேன்மை இலக்கணங்களை எவரிடமிருந்து கற்றுக் கொண்டார்கள்?

**நாத்திகன்:** எவர் உண்மையாக இல்லத் துறவு பூண்டார்களோ அவர்கள் மற்றொருவரிடம் கற்றுக் கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை. அவர்கள் அறியாதது ஒன்றுமில்லை; வள்ளுவரைப் பார்க்க.

- *குயில், கிழமை இதழ்,* **12.07.1960**

## 22

**துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்**
**திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.**

**பி. :** **துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக் கொண்டு அற்று.**

பொருள்: துறந்தார் – அறப்பனுவல் அருளிச் செய்யும் பொருட்டு இல்லந் துறந்த தமிழ்ச் சான்றோரது, பெருமை – பெருமைக்கு, துணைக்

கூறின் – நிகர் இவ்வளவு என்று கூறப் புகுந்தால், அது வையத்து இறந்தாரை – இன்று வரைக்கும் உலகத்தில் இறந்தாரின் தொகையை – எண்ணிக்கொண்டு அற்று – கணக் கெடுத்தால் எப்படி முடியாதோ அப்படிப்போல் முடியாது போகும்.

**கருத்து:** இன்றுவரை இறந்தார் தொகையை எண்ண முடியாதது போல், துறந்தார் பெருமையையும் இவ்வளவென்று கணக்கிட்டுச் சொல்ல இயலாது.

துறந்தார் – இறந்த கால வினையாலணையும் பெயர். ஆறனுருபு தொக்கது. பெருமை – நான்காவதன் தொகை, துணைக்கூறல் ஒரு சொற்றன் மையது. கொண்டு, கொண்டால் என்பதன் திரிபு. அற்று– அத் தன்மைத்து; குறிப்பு வினைமுற்று. ஒரு நாளில் அன்றி எந்நாளிலும் அமைய இது பொருள் என அடைதற்கு அடிப்படையான ஒழுகலாறு களைத் துணிவுற்று இயற்றியருளினார் ஆதலின் அவர் பெருமை அளவிட முடியாதாயிற்று.

## இச் செய்யுள் உரையின் மேல் எழும் ஆத்திக, நாத்திக வினாவும், உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**நாத்திகன்:** துறந்தார் என்று நடித்துத் துணிந்து கொள்ளையடிக்கும் ஆட்களைப் பார்த்து வருகின்றோம். சிவசிவா என்பார்கள்; கோவிந்தா என்பார்கள்; சைவத்தை நிலைநாட்டுகின்றோம் என்பார்கள்; வைணவத்தைப் பரப்புகின்றோம் என்பார்கள். இவர்கட்குப் பெருமை ஒரு கேடா?

**உரை ஆசிரியர்:** வள்ளுவர் சொல்லும் துறந்தார் சங்கராச்சாரியும் அல்லர்; தருமபுரத்தாரும் அல்லர்.

**நாத்திகன்:** வேறு?

**உரை ஆசிரியர்:** அவர் குறித்தது துறந்தாரை!

**நாத்திகன்:** அப்படியானால் சரி.

**ஆத்திகன்:** சிவனடியாரைக் கண்டால் சிவனையே கண்டதாக மகிழ்ந்து அவர்க்கு மனநிறைவு செய்யவேண்டும். நாமக்கட்டி நெற்றியைக் கண்டால் நாராயணனையே கண்டதாக மகிழ்ந்து ஆடவேண்டும் என்பதை இச்செய்யுள் நமக்கு நினைவூட்டவில்லையா?

**உரை ஆசிரியர்:** ஆமாம் நினைவூட்டுகின்றது. அவர்களைக் கண்டால் உடனே ஊர்க்காவலர்க்கு அறிவித்துவிடவேண்டும். அவர்கள் முடிச்சவிழ்த்திருந்தால் பிடித்துக் கொள்வார்கள். பிச்சை எடுப்பது கண்டால் பிச்சைக்கார விடுதிக்கேனும் சாவடிக்கேனும் அனுப்பு வார்கள்.

**ஆத்திகன்:** சங்கராச்சாரியைக் கூடவா?

**உரை ஆசிரியர்:** அவர் பாட்டனைக்கூட.

**நாத்திகன்:** இறந்தாரை எண்ணிக் கொள்வது அருமையா?

**உரை ஆசிரியர்:** இறந்தார் இத்தனை பேர் என்று கணக்குக் காட்டுவது மட்டுமன்று, இவ்வளவு தொகையிருக்கும் என்று மனத்தால் அளப்பதும் முடியாது என்றபடி.

**- *குயில், கிழமை இதழ், 26.07.1960***

## 23

**இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற் றுலகு.**

**பி.மா.:** **இருமை வகை தெரிந்து ஈண்டு அறம்**
**பூண்டார் பெருமை உலகு பிறங்கிற்று.**

பொருள்: இருமை - அறம் பாவம் என்னும் இரண்டின், வகைதெரிந்து - கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து, ஈண்டு - இல்லறத்தினின்று, அறம் பூண்டார் - துறவறத்தை மேற்கொண்டாராகிய தமிழ்ச் சான்றோரின், பெருமை - பெருமையே, உலகு - உலகில், பிறங்கிற்று - மேன்மையுற்றது.

கருத்து: செயற்கருஞ்செயல் என்பது மக்கள் கடைத்தேற ஒருவன் இல்லந்துறத்தல் என்பதேயாகும்.

இருமை - இருமைத்தன்மை. இரண்டு என்றபடி. இவ்வாறே மூன்றைக் குறிக்க மும்மை எனவரும். இருமைத் தன்மை என்பதன் மரூஉவே இருமை என்க.

பாவம் - வடமொழியன்று; தூய தமிழ்ச் சொல். மனம் தன்னிலை திரியாது நிற்றலே பொருள். அஃது பொருள்களின் மேற்சென்று பரவுதல் மனக்கோட்டம். பர - பரவுதல் முதனிலை. அம்தொழிற் பெயர்

இறுதி நிலை. அறம் என்பதன் எதிர்மொழி மறம் அன்று, பாவம் என்பதேயாகும். அது "பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி" என்றதனாலும் அறிக.

### இச்செய்யுள் உரையின்மேல் எழும் ஆத்திக, நாத்திக வினாவும், உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

ஆத்திகன்: இருமை என்பதற்குப் பரிமேலழகர் பிறப்பு, வீடு என்று பொருள் கொண்டிருக்க நீவிர் அறம் பாவம் என்று பொருள் கூறியதென்ன?

உரை ஆசிரியர்: பரிமேலழகர் பிறப்பு, வீடு என்று பொருள் கொண்டது பொருந்தாது. பிறப்பு, வீடு என எண்ணுங்கால் நடுவில் இருப்பு (வாழ்க்கை) என்பதும் எழுவதால் அறம் பாவம் என்று எண்ணும் போது இடையில் எதுவும் விடப்படவில்லை.

நாத்திகன்: அறம் என்றால் முற்பிறப்பில் செய்ததா? பாவம் என்பதும் அப்படித்தானா?

உரை ஆசிரியர்: முற்பிறப்புக் கேள்வி எழுப்பப் படுவதே தேவையில்லை. பிறந்துள்ளவன் இதற்குமுன் பிறந்தான் என்பது பற்றியும், இனியும் பிறப்பான் என்பது பற்றியும் திருவள்ளுவர் ஒன்றுமே சொன்னதில்லை, இதை மேலே விளக்கப்படும் முற் பிறப்புப் பிற் பிறப்புப் பற்றி திருவள்ளுவர் கூறியுள்ளதுபோல் பரிமேலழகர் உரையில் தோன்றுகின்றதென்றால் அது பரிமேலழகர் வேலைப்பாடு என்க.

நாத்திகன்: இல்லத்தினின்று துறவறத்தை அடைந்தவர் என்று பொருள் கூறினீர்கள் அஃதென்ன?

உரை ஆசிரியர்: அவர்கள் இல்லத் துறவிகள் என்பதை அறிவித்தற் பொருட்டு!

- *குயில், கிழமை இதழ்*, **2. 8. 1960**

## 24

**உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்**
**வரனென்னும் வைப்புக்கோர் வித்து.**

**பி.மா.:** உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான்
வைப்புக்கு ஓர்வித்து வரன் என்னும்.

**பொருள்:** உரன் - அறிவு, என்னும் - என்கின்ற, தோட்டியான் - தோட்டிக் கருவியால், ஓர் ஐந்தும் - ஐம்பொறிகளாகிய ஐந்து யானைகளையும், காப்பான் - அவற்றின் புலன்கள் மேல் செல்ல ஒட்டாமற் காக்கவல்ல இல்லத் துறவியானவன், ஓர்வித்து - தான் கண்டவாறு உண்மை பிறரையும் உணரும்படிசெய்து, வைப்புக்கு - உலகினர்க்கு, வரன் என்னும் - இதுவே பெறத்தக்க இன்பப் பேறு என்று அருளிச் செய்து வலியுறுத்துவான்.

**கருத்து:** இல்லத் துறவுடையான் தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வுலகம் என்று எண்ணித் தொண்டு செய்வான்.

என்னும் - செய்யும் என்னும் முற்று. இங்கு ஆண்பாலுக்கு வந்தது. காப்பான் எழுவாய், என்னும் பயனில்லை. வரன் - வரம் என்பதன் திரிபு, வியன் - அகன் என்பவற்றிற்போல், வியல் என்கிளவி அகலப் பொருட்டே. (தொல். சொல் - 364) என்ற நூற்பா வுரையில் "இது வியன் தானை விறல் வேந்தே (புறம் 38:4) எனத் திரிந்தும் நிற்கும் என்றது இங்குக் கருத்தக்கது.

வரன் என்பதன் பொருள் என்னெனில் கைவரல் என்பது. இதை வடவர் சித்தி என்பர். ஈண்டு இன்பப்பேறு எனப் பொருள் கூறப்பட்டது. ஓர்வித்தல் - ஓர்தல் என்பதன் பிறவினை. தோட்டி - யானை ஓட்டுவதோர் கருவி. இதை வடவர் அங்குசம் என்பர்.

உள்ளத் துறவுடையான் எல்லா வற்றையும் துறந்தவன், அவன் இன்பமெனக் கொண்டதுதானே ஆனதோர் நிலை என்பர் சில தத்துவ நூலுடையார். இல்லந்துறந்தார் மன அறிவுடன் உலக முன்னேற்றத்தின் பொருட்டுத் தொண்டு செய்வதே இன்பமெனக் கொண்டவன் என்ற அரிய உண்மையை விளக்கவந்தது இந்தக் குறட்பா என உணர்தல் வேண்டும்.

## இச்செய்யுள் உரையின்மேல் எழும் ஆத்திக, நாத்திக வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** உரன் என்பது பற்றி அறிய வேண்டியதென்ன?

**உரை ஆசிரியர்:** உரம் என்பதன் போலியே, உரன். அதை மொழி இறுதிப் போலி என்க. மரம் - மரன், திறம் - திறன் முதலியவும் அது.

**நாத்திகன்:** வரம் என்பது வரன் ஆயிற்று என்றீர். நன்று - வரம் என்பது கடவுள் கொடை என்று கூறுகிறார்கள். அதை வள்ளுவர் ஏன் வற்புறுத்த வேண்டும்?

**உரை ஆசிரியர்:** ஆத்திகர் தத்தம் மதத்தையே சேர்ந்தவை உலகமும் உலகப் பொருள்களும் என்று காட்டுவர். அன்றியும் அயல் மதத்தவர்க்கு அவற்றின்மேல் எவ்வுரிமையும் இல்லை என்றும் மறுப்பர். தமிழ்ச் சொற்களுக்குத் தம் எண்ணம் போன போக்கில் காரணம் கற்பிப்பர். அதுபற்றித் திருவள்ளுவரிடமா வாலாட்டு வது! அவர் மதங் கடந்தவர் அல்லரோ? வரம் - வா என்பதன் அடியாகப் பிறந்த - வரவு - அரிய வரவு என்ற பொருளுடைய தான தமிழ்க் காரணப் பெயர் என்று மனதுள் பதிக்க.

**ஆத்திகன்:** ஓர் வித்து?

**உரை ஆசிரியர்:** உணர்வித்து, உணரும்படி செய்து.

**ஆத்திகன்:** உணரும்படி செய்து பெறத்தக்க பேறு என்பான் துறவி என்பதில் உணரும்படி என்றால் எதை?

**உரை ஆசிரியர்:** வரன் என்பதை!

**ஆத்திகன்:** அதை அல்லவா முதலில் சொல்லியிருக்க வேண்டும்?

**உரை ஆசிரியர்:** உணரும்படி செய்தலை முதலில் வைத்தது விரைவை உணர்த்த. இதுதான் பெறத்தக்கது என்பதை உணர்வில் ஏறும்படி விரைந்து செய்து என்றபடி.

- *குயில், கிழமை இதழ்,* **09.08.1960**

## 25

**ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா**
**னிந்திரனே சாலுங் கரி.**

**பி.மா: ஐந்து அவித்தான் ஆற்றல் சாலும் கரி**
**அகல் விசும்பு உளார் கோமான் இந்திரனே?**

**பொருள்:** ஐந்து - பொறிகள் ஐந்தையும், அவித்தான் - புலன்களின் மேற்செல்லவொட்டாமல் அடக்கிய தமிழத் துறவியினது, ஆற்றல் - அறப்பனுவலுக்கு, சாலுங்கரி - போதிய சான்று, அகல் விசும்புளார் கோமான் இந்திரனே - அகன்ற விசும்பில் உள்ள வரின் கோமானாகிய இந்திரனாற் செய்யப் பெற்றதென்னும் ஐந்திர நூலா? இல்லை.

**கருத்து:** தமிழ் நூற்களுக்கு வடநூல் முதனூலன்று.

ஆற்றல் என்றால் ஆற்றலால் விளைந்த அறப்பனுவலை இவ்வாறு ஆனது தொழிலாகு பெயர். இந்திரன் என்றது இந்திரனாற் செய்யப் பெற்றதாய் உரைக்கும் ஐந்திரம் என்னும் நூலை. இவ்வாறு ஆனது ஆக்கியோன் ஆகு பெயர்: "திருவள்ளுவர் படித்தான்" என்பதில் திருவள்ளுவர் அருளிய திருக்குறளுக்கு ஆனது போல். அகல் விசும்புளார் கோமான் என்றது இந்திரன் என்ற பெயருக்கு அடை.

இவ்வாறு அகல் விசும்புளார் கோமான் என்று அடை கொடுத்தார் எனின், இந்திரன் ஒருவன் இருந்தான் என்பதையும் ஆசிரியர் ஒப்பினார் என்றும், அவ்வாறு ஒப்பவே, ஐந்திர நூல் தமிழ் நூற்களின் முதல் நூலாகும் தகுதியையும் ஒப்பத்தான் நேரும் என்றும் பலவாறு எண்ணியிழுக்கடைதல் வேண்டாம்.

வண்தமிழ் நாட்டின் கண் வந்தேறிகள் தம்மை உயர்த்திக் காட்டப் பொய்ந்நூற்கள் பல புனைந்தனர். அவ்வாறு புனைந்த பொய் நூற் கருத்துக்களை மெய்யென பரப்பி வந்தனர். அவற்றைத் தமிழர் நம்பித் தம் ஒழுக்கத்திற் பிறழலாகாதன்றோ? அது பற்றியே திருவள்ளுவர் இந்நூலில் பெரும்பான்மை யிடங்களில் தமிழர்க்கு விழிப்பை ஆக்கி மீட்கத் திருவுளங் கொண்டார் என்பதை மறக்க லாகாது. பின்னை ஏன் அவ்வாறு அடை தந்தார் எனின், நூல் செய்வார் அந்நூலைச் செய்து செல்வதில் எழுவகை முறைகளை மேற்கொள்ளு வார்கள். அவை வருமாறு:

எழுவகை மதமே 1. உடன்படல், 2. மறுத்தல், 3. பிறர் தம் மதம் மேற்கொண்டு களைவே, 4. தாஅன் நாட்டித் தனாஅது நிறுப்பே, 5. இருவர் மாறுகோள் ஒரு தலை துணிவே, 6. பிறர்நூற் குற்றங் காட்டல், 7. பிறிதொடு படாஅன் தன்மதங் கொளலே. (– நன்னூல் சூ. 11)

இவற்றில் 'பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவே' என்பது என்னவெனில், பிறர் கொள்கையில் ஒருபுடை மேற்கொண்டு பின்பு அது முழுதும் மறுத்தொழித்தல் என்க. இக்கொள்கை கொண்டே ஆசிரியர் அதை எடுத்தார். நஞ்சு நிறைந்த குடத்தைக் கையில் வாங்கித் தான் மண்ணிற் புதைக்க வேண்டும்; வாங்கிச் சுமப்பதுகொண்டே அதை அவன் அருந்தினதாக எண்ணிவிடுதல் கூடாதன்றோ! வடவர் கதைப்பது போல் இந்திரன் ஒருவன் இருந்தானாயினும் ஆகுக.

அவனும் தேவர் தலைவனே ஆயினும் ஆகுக. ஐந்தவித்த அறத் தமிழர் ஆக்கிய நூலுக்கு ஐந்தவியாது அயன் மாதர் கற்பவித்த அறமிலான் இந்திரனின் ஐந்திரம் முதனூலாகாது என்பார், "அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சாலுங்கரி" என்றார்.

இந்திரனே என்பதற்கு இந்திரனா என்பது பொருள். ஏ வினா எதிர்மறைப் பொருட்டு, கரி - உண்மை, காரணம் கரு முதனிலை இ இறுதினிலை.

## இச்செய்யுள் உரையின்மேல் எழும் ஆத்திக, நாத்திக வினாவும், உரையாசிரியன் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** அகல் விசும்பு உளார் கோமான் என்று இந்திரனைச் சிறப்பித்தார் வள்ளுவர். ஆதலால் இந்திரனை ஆதரிக்கின்றார் அல்லரோ?

**உரை ஆசிரியர்:** இந்திரனைப் பற்றித் தமிழரின் எதிரிகள் அவ்வாறு சொல்லித் திரிவதையே வள்ளுவர் சொன்னார். தமிழர் களிடையே அந்த இந்திரன் கதை புகுந்துவிட்டது. அதை அப்படியே சொல்லிக் காட்டித்தானே மறுக்கவேண்டும்? அடையோடு சொல்லாவிட்டால் வேறு இந்திரனையும் குறித்து விடுமன்றோ? நரேந்திரன் முதலிய பல இந்திரர்கள் பெயர்கள் உலவுகின்றதையும் நோக்குக.

**ஆத்திகன்:** கரி வடசொல் என்கிறார்களே?

**உரை ஆசிரியர்:** கரு என்ற தமிழ்ச் சொல் கரு + இ = 'முற்றும் அற்று ஒரோ வழி' என்ற நன்னூல் சட்டத்தால் கரி எனப் புணர்ந்தது. கரு முற்றியலுகரம். அதன் முன் இகர உயிர் வந்தது. இகரம் பெயர் இறுதிநிலை. எனவே அது தூய தமிழ்க் காரணப் பெயர். சொல்லு வார்கள் இது வடசொல் என்று. அவர்கள் எதைத்தான் தமிழ்ச் சொல் என்று சொல்லுகிறார்கள்! வீட்டிற்குள் புகுந்து பொருளைத் திருட வந்த ஒரு கூட்டம் தனக்கு ஆளவந்தார் ஒத்திருப்பது எண்ணி, வீடே என்னுடையது என்றுதானே சொல்லும்!

*- குயில், கிழமை இதழ், 16.8.1960*

## 26

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்.**

**பி.மா.:** **பெரியர் செயற்கு அரிய செய்வார், சிறியர் செயற்கு அரிய செய்கலா தார்.**

**பொருள்:** பெரியர் - தமிழத் துறவிகள், செயற்கு அரிய செய்வார் - பிறர் செய்தற்கு அரியவான செயல்களைச் செய்வார்கள். சிறியர் - அறிவில்லாதவர், செயற்கு அரிய செய்கலாதார் - செய்தற்கு அரிய செயல்கள் செய்யமாட்டார்.

**கருத்து:** பெரியர் என்றது தமிழ்த் துறவிகளை. அவர் செயற்கரிய செய்தலாவது, தன்னல நீத்தலும் பிறர் நலம் காத்தலும். சிறியர் என்றது அறிவிலாதாரை - வந்தேறிகளை - உயிர்கள் மாட்டுச் செந்தண்மை இல்லாதவரை.

இதுவும், அறப் பனுவல் செய்த துறந்தாரை உட்கொண்டே சொல்லி அவர் அருமை கூறியவாறென்க.

### இச்செய்யுள் உரையின்மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும், உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**நாத்திகன்:** பெரியர் என்றது எப்படித் தமிழத் துறவிகளைக் குறிக்கும்?

**உரை ஆசிரியர்:** அதிகாரத்தால்!

**நாத்திகன்:** துறவிகளிலும் தமிழத் துறவிகளைக் குறிக்கும் என்பது எப்படி?

**உரை ஆசிரியர்:** தமிழகத்தில் தமிழரால் தமிழில் சொல்லியுள்ளது ஆங்கிலத் துறவியையா குறிக்கும்? அல்லது ஆரியத் துறவியையா குறிக்கும்?

**ஆத்திகன்:** செயற்கரிய செய்தல், யோகம் முதலிய செய்து கடவுளை அடைதல் அல்லவா?

**உரை ஆசிரியர்:** இவ்வாறு திருவள்ளுவர் கருதினமைக்குச் சான்று ஒன்றையும் காணோம். பிறர் நலம் கருதி இல்லம் துறத்தலும் மக்களின் மேன்மைக்கும் ஒழுக்கத்திற்கும் உழைத்தலும் அவர்களின் நோக்கம் என்பதற்கு இந்த அதிகாரம் சான்று.

**ஆத்திகன்:** செயற்கரிய செய்யாமை என்பது என்ன?

**உரை ஆசிரியர்:** மதத்தையும், சாதியையும் வற்புறுத்தும் செக்கு மாடுகள் செயற்கரிய செய்யாதவர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்று கூறிய அருஞ் செயலும் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறிய அருஞ் செயலும் அவர்கள் செய்யாதவர்தாமே!

**- *குயில், கிழமை இதழ்*, 23.8.1960**

## 27

**சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே யுலகு.**

**பி.மா.:** **உலகு சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின் வகை தெரிவான் கட்டே.**

பொருள்: உலகு - உலகமானது, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று - சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், நாற்றமும், என்ற, ஐந்தின் - ஐந்து நுண் பொருள்களின், வகை - கூறு பாட்டை, தெரிவான் கட்டே - ஆராய்ந்துணர்ந்தவன் கண்ணதே.

கருத்து: மெய்யுணர்வுடையார்க்கே உலகின் உண்மை காணல் கூடும்.

பகவன் என்பது மெய்யுணர்வின் முதன்மை என்பது முன்னே விளக்கப்பட்டது. அம்மெய்யுணர்வைப் பெற்றவரே அப்பகவனை அடைந்தவர் என்க. மெய்யுணர்வு பெற்ற நிலையே வீடு என்னும் எண்ணூற் கொள்கை இங்குக் கருதத் தக்கது.

எல்லாம் இருபத்தைந்து தத்துவங்களில் அடங்கின என எண்ணூல் கூறுகின்ற அவ்விருபத்தைந்தையே ஆசிரியர் இங்குச் சுவை முதலியவும் அவற்றின் வகையும் எனச் சுருங்கக் கூறினார். இப் பாட்டுக்குப் பரிமேலழகரும் உரை கூறுகையில் இது சாங்கியநூ (எண்ணூ)லின் அடிப்படையில் அமைந்ததான உண்மையை ஒப்புகிறார்.

### எண்ணூல் விளக்கம்

தத்துவம் 1 : ஆதி (மூலப்பகுதி) இது இன்னபடி என்று ஒருவராலும் அறியப்படாதது. காமம், வெகுளி, மயக்கம் என்ற முப்பண்புகளினாயது. மனத்திற்கு விளங்காதது. எல்லாப்

பொருளும் தோன்றுதற்கு இடமானது. தனக்கொரு பெரிது இல்லாதது.

தத்துவம் 2 : அறிவு (புத்தி) இது ஆதி (மூலப்பகுதி) யினின்று தோன்றியது.

தத்துவம் 3 : வெளி (ஆகாயம்) இது அறிவினின்று (புத்தி) தோன்றியது.

தத்துவம் 4 : காற்று (வாயு) இது வெளியினின்று தோன்றியது.

தத்துவம் 5 : நெருப்பு (தேயு) இது காற்றினின்று தோன்றியது.

தத்துவம் 6 : நீர் (அப்பு) இது நெருப்பினின்று தோன்றியது.

தத்துவம் 7 : மண் (பிரிதிவி) இது நீரினின்று தோன்றியது.

தத்துவம் 8 : மனம் இது மண் முதலியவற்றின் கூட்டத்தினின்று தோன்றியது.

தத்துவம் 9 : முனைப்பு (ஆங்காரம்) இது மனத்தினின்று தோன்றியது.

தத்துவம் 10 : ஒலி இது வெளியினின்று தோன்றியது.

தத்துவம் 11 : சுவை இது நீரினின்று தோன்றியது.

தத்துவம் 12 : ஒளி இது தீயினின்று தோன்றியது.

தத்துவம் 13 : நாற்றம் இது நிலத்தினின்று தோன்றியது.

தத்துவம் 14 : ஊறு இது காற்றினின்று தோன்றியது

தத்துவம் 15 : செவி இது ஒலியினின்று தோன்றியது.

தத்துவம் 16 : வாய் இது சுவையினின்று தோன்றியது.

தத்துவம் 17 : கண் இது ஒளியினின்று தோன்றியது.

தத்துவம் 18 : மூக்கு இது நாற்றத்தினின்று தோன்றியது.

தத்துவம் 19 : மெய் இது ஊற்றினின்று தோன்றியது.

தத்துவம் 20 : பேச்சு இது மெய்யினின்று தோன்றியது.

தத்துவம் 21 : கால் இது மெய்யினின்று தோன்றியது.

தத்துவம் 22 : கை இது மெய்யினின்று தோன்றியது.

தத்துவம் 23: எருவாய் இது மெய்யினின்று தோன்றியது

தத்துவம் 24 : கருவாய் இது மெய்யினின்று தோன்றியது

தத்துவம் 25 : பகவன் இது எதினின்றும் தோன்றியதன்று மெய்யுணர்வு.

இப்பாட்டால், அறப்பனுவல் செய்வார் இங்ஙனம் தத்துவ உணர்வு உடையார் என்று குறித்தார்.

## இச்செய்யுள் உரையின் மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** திருவாரூர்க் கபிலர் அருளிய எண்ணூற் கொள்கை ஒரு மதமல்லவா?

**உரை ஆசிரியர்:** இல்லை: பண்டைத் தமிழர் பண்பாடு. அதைத் தத்துவம் என்றும் சொல்வர்.

**ஆத்திகன்:** மதவிளக்கம் கூறுவார் எண்ணூற் கொள்கையையும் ஒரு மதமாகவே வைத்து விளக்குவர்.

**உரை ஆசிரியர்:** எனக்குத் தெரியாது.

**ஆத்திகன்:** தத்துவ விளக்கம், கூறும் ஆசிரியர்கள் எண்ணூற் கொள்கையையும் தத்துவ நூற்களில் ஒன்றாக வைத்துப் பாடம் சொல்லுவதை நீவிர் அறிவீரா?

**உரை ஆசிரியர்:** தத்துவம் மதமல்ல என்று நீவிர் அறிய வேண்டும்.

**ஆத்திகன்:** எண்ணூற் கொள்கையைப் பண்பாடு என்று கூறுவது சரியா?

**உரை ஆசிரியர்:** மதமான பேயாற் பிடிபடாமல் இருக்க அவர்களிடம் அமைந்திருக்கும் பண்பாடுதான் எண்ணூற் கொள்கை. உலகம் சிவனாற் படைக்கப்பட்டது திருமாலார் படைக்கப்பட்டது என்றெல்லாம் பண்டைத் தமிழர் தடுமாறியதில்லை. முதன்மையி னின்று உலகம் தோன்றியது என்று எண்ணி மதவலையிற் படாத திறம் பண்பாடுதான். மக்கள் அடையத்தக்கது. சிவனடி, திரு மாலடி, பிற என்று பண்டைத் தமிழர் தடுமாறியதில்லை. பெறத் தக்கது அறிவு என்றார்கள். சிவனும், திருமாலும் பிறவும் மக்கள் நல்வாழ்வுக்குத் தேவையில்லை என்றார்கள். உருவ வணக்கம் முட்டாள் தனம் என்றார்கள். இவ்வாறு மேற்கொண்டு ஒழுகுவது தான் பண்பாடு. இவ்வாறு கூறுவதுதான் கபிலர் எண்ணூல்! இதைத் தான் வடவர் சாங்கியம் என்று மொழி பெயர்த்துக் கொண்டனர்.

**நாத்திகன்:** கடவுள், சிவம், திருமால் வேண்டியதில்லை என்று சாங்கியம் கருதுவதால் சாங்கியம் நாத்திக நூலே ஆகும். அன்றியும் சாங்கியம் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டது திருக்குற ளாதலின். திருக்குறள் நாத்திக விளக்கமே. அன்றியும் நாத்திக

விளக்கமே திருவள்ளுவர் செய்தார். ஆதலின் வள்ளுவர் நாத்திகன் இல்லையா?

**உரை ஆசிரியர்:** மக்கள் பெறத்தக்கது மெய்யுணர்வு என்றுகூறி விளக்கிய திருவள்ளுவர் நாத்திகருமல்லர் ஆத்திகரும் அல்லர்.

- *குயில், கிழமை இதழ்*, **30.8.1960**

## 28

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்.**

**பி.மா :** **நிலத்து நிறைமொழி மாந்தர் பெருமை**
**மறைமொழி காட்டி விடும்.**

**பொருள்:** நிலத்து - உலகின் கண், நிறை - உண்மை நிறைந்த, மொழி மாந்தர் - நூலைச்செய்த தமிழ்ச் சான்றோரின், பெருமை - பெருமையை, மறை - பொய்மை உடைமையால் மறை மறைந் தொழிந்த, மொழி - மொழிகள், (பாடைகள்) காட்டிவிடும் - எடுத்துக் காட்டிவிடும்.

**கருத்து:** பொய்ந்நூலுடைய பிறமொழிகளே மெய் நூலருளிய தமிழ்ச் சான்றோரது பெருமையைக் காட்டிவிடும்.

ஒரு மொழி (பாடை) நிலைத்து வாழவேண்டுமானால் அம்மொழி யில் உண்மை நூற்கள் அமைய வேண்டும். அவ்வுண்மை நூற்களை யும் மெய்யுணர்வுடையாராலேயே செய்ய முடியும். அத்தகு நூலாசிரிய ரின் பெருமையைப் பொய்ம்மை நிறைந்திருந்த காரணத்தால் நூற் களும் ஒழிய அந்நூற்களை யுடைய மொழியும் ஒழிந்து போன தொன்றே எடுத்துக் காட்டி விடும் என்பார் இவ்வாறு கூறினார்.

நிறைமொழி - நிறைந்த மொழி. அஃதாவது உண்மை நிறைந்த மொழி என்றாம். இறந்த கால வினைத்தொகை நிலைத்தொடர்.

நிறைமொழி என்பதிலுள்ள மொழி என்பது நூலுக்காயிற்று; ஆகு பெயர், திருவாய்மொழி, திருவாசகம், முனிமொழி என்பவற்றிற்போல.

மறைமொழி - இறந்தகால வினைத்தொகை நிலைத் தொடர், நிகழ் காலத்து எனினும் இழுக்காது. அவ்வாறு கூறினால், மறைமொழி என்பது மறைந்து வருகின்ற மொழி என விரிதல் வேண்டும். இதில் வரும் மொழி, மொழி முதலைக் குறித்தது. இதைப் பாடை என்பார் வடக்கர்.

தமிழ் உலகு தோன்றிய நாளில் தோன்றியது என்பர் தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்தவர். இன்றுவரை அது அழியா திருப்பதால் தமிழ் மொழியில், தமிழ்ச் சான்றோர் உண்மை நிறைந்த நூற்களையே இயற் றினார் என்பது உணரப்படும். ஆரியம் மறைந் தொழிந்த மொழிகளில் ஒன்று. இப்பாட்டுக்குப் பரிமேலழகர் கூறிய உரை வருமாறு:

நிறைமொழி மாந்தர் பெருமை – நிறைந்த மொழி யினையுடைய துறந்தாரது பெருமையை, நிலத்து மறை மொழி காட்டிவிடும் - நிலவுலகத்தின் கண் அரவணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டிவிடும்.

நிறைமொழி என்பது அருளிக் கூறினும், கொண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தே விடும் மொழி. காட்டுதல் பயனா னுணர்த்துதல் என்பது.

இதில் அருளிக் கூறுவதும் வெகுண்டு கூறுவதும் துறவிகளுக்கு என்று காட்டினார். துறவிகள் அருளிக் கூறுவது எப்போது? வெகுண்டு கூறுவது எப்போது? தமக்குப் பயன் பட நடந்து கொள்ளும்போது அருளிச் கூறுவார் என்றால், பயனை எதிர்பார்ப்பதும், அதற்குக் கைம்மாறு செய்வதும் துறவிகட்கு அடுக்குமா? பிறர் தமக்குத் தீமையுற நடந்து கொள்ளும்போது வெகுண்டு கூறுவார் என்றால் சிறியோர் செய்த சிறுபிழைக்கு வெகுளுவதும், அதற்காக அவரை ஒறுத்தலும் துறவிகட்கு அடுக்குமா? நீத்தார் என்பதற்கு முற்றுந் துறந்தார் என்று பொருள் கூறிய பரிமேலழகர் இவ்வாறு பொருள் கூறலாமா?

புராணங்களில் நாம் காணும் துறவிகளைத் தமிழ்த் துறவிக ளுடன் ஒப்பிட்டுப் பேசவும் கூடாது. இப்பாட்டில் புராணத் துறவிகளை ஆசிரியர் கூறியிருக்க முடியாது. அவர் தமிழ்த் துறவிகளை உட் கொண்டே கூறினார். ஆதலின் பரிமேலழகர் கொண்ட அருளிக் கூறுதல், வெகுண்டு கூறுதல் புராண விளக்கம் பொருந்துவதன்று.

இவ்வாசிரியரே,

**“இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு”** என்றும்

**“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்துவிடல்”**

என்றும் பலவாறு கூறித் தமிழத் துறவிகளின் சால்பை விளக்கி யருளினார். அதை உற்றுநோக்குவார்க்குத் துறவிகளுக்குப் பிறரை அருளிக்கூறும் நிலையும் வெகுண்டு கூறும் நிலையும் ஏற்படுதல் இருக்க முடியாது என்பது புலனாகும்.

**“யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்”** (குறள் 341) என இவ்வாசிரியர் கூறியபடி, எப்பொருள் மேல் செல்லும் பற்றை விடுகிறானோ அப் பொருளைப் பெற வேண்டும் என்பதால் வரும் துன்பம் இல்லாதொழியும். ஆதலின், துறவிகள் எப்பொருள் மேலும் பற்றுவையார் என்றால், சிலரால் நலம் பெறுதலால் அவரை அருளிக் கூறுதலும், சிலரால் தீமை பெறுதலால் அவரை ஒறுத்தலும் செய்யார்.

புராணத் துறவிகளின் இழிந்த போக்கினை எண்ணுக. அவர்கள், ஒருவன் பிழை செய்தான் என்றும், ஒருவன் மதியாதிருந்தான் என்றும், அவர்களைக் கல்லாக்குவதும், எரிப்பதும் ஆகிய பல வெறுக்கத்தக்க ஒறுத்தல்களைச் செய்ததாய்க் கூறப்படுகிறது.

இத்தகைய பிற்போக்காளர் அருளிக் கூறினாலும் வெகுண்டு கூறினாலும் அவ்வாறே பயன் கிடைத்துவிடும் என்பதும் இயலாத தொன்று. சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லிக்கு இடமளிக்கும் அவர்கள் துறவிகளாதலும் இல்லை.

இதனால் நிறைமொழி என்பதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையும் அதுபற்றி அவர் தந்த விளக்கமும், தங்கொள்கை நோக்கித் தமிழரை இழுத்துச் செல்வனவேயன்றி, ஏற்புடையன அல்ல என மறுக்க.

இனிப் பரிமேலழகர்,நிறைமொழி என வரும் தொல்காப்பியச் செய்யுளின் பிழையான உரையினை மேற்கொண்டு இப்பாட்டுக்கும் அது போலவே உரையும் விளக்கமும் தந்திருக்கிறார் என எண்ணக் கிடக்கின்றது. இவ்வாறு சொற்றொடர் ஒப்பு நோக்கிப் பலவிடங்களில் பொருந்தாவுரை செய்து தம் திருந்தா நிலையை வெளிக்காட்டி யிருக்கின்றார். இது மேலே சொல்லவேண்டிய இடத்தில் சொல்லப்படும்.

## இச்செய்யுள் உரையின்மேல் எழும் ஆத்திக, நாத்திக வினாவும், உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** முனிவர்கள், ரிஷிகள் சாபமிட்டாலும், அனுக்ரகம் செய்தாலும் அப்படியே பயன் ஏற்படுத்துவ தில்லையா?

**உரை ஆசிரியர்:** ஆரிய முனிவர்களும் ரிஷிகளும் அவர்களால் கொல்லப் படுகின்றவர்களும் யார் என்று முதலில் ஆராயவேண்டும். பண்பாடு சிறிதும் இல்லாதவரும், தகுதி இல்லாதவருமே அவ்வாறு கொல்லப்படுகின்றனர் என்று அவர்களின் புராணங்கள் இதிகாசங்களைக் கொண்டே அறிந்து கொள்ளலாம். அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும் அவ்வாறே பயனைத் தந்துவிடும் என்பதில் பொருளே இல்லை. ஒருவர்க்கு அருளுதலும் ஒருவர்மேல் வெகுளுவதும் ஏற்படுவது எந்த மனத்தில்? பற்று நிறைந்த மனத்தில். பற்றுடைய்யான் சான்றோன் அல்லன். ஆரியர் சொல்லும் இக்கதைகள் அறிவின் அடிப்படையில் எழுந்தன அல்ல. அவை வெறும் பூச்சாண்டிகள்.

**நாத்திகன்:** உலகில் என்னாது நிலத்து என்று வள்ளுவர் சொல்லுவா னேன்?

**உரை ஆசிரியர்:** மறைந்து வருகின்ற - மறைந்தொழிந்த மொழியைச் சொல்ல வந்தவர், என்றும் நிலைத்து நிற்கின்ற இடையில் ஒருவரால் தோன்றியதல்லாத உலகத்தையே கூற வேண்டும். அவ்வாறு பொருள் படுவது நிலம். நில் என்ற முதனிலையின் பொருளை நோக்குக.

**ஆத்திகன்:** மாந்தர் என்று வள்ளுவர் சொன்னது கொண்டு தமிழத் துறவிகளையே அவர் சொன்னார் என்று கொள்வது எப்படி?

**உரை ஆசிரியர்:** நிறைமொழி என்ற அடையால்.

**- குயில், கிழமை இதழ், 6. 9. 1960**

## 29

**குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயுங் காத்த லரிது.**

**பி.** : **குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி**
**கணமேயும் காத்தல் அரிது.**

**பொருள்:** குணம் என்னும் - காமம் வெகுளி மயக்கம் என்று சொல்லப் படுகின்ற, குன்று - மலைத்தலையில், ஏறி நின்றார் - ஏறி அசை வின்றி நின்றாரது, வெகுளி - அம்முக் குணங்களில் ஒன்றான வெகுளியை, கணமேயும் - கண் இமைக்கும் நேரங்கூட, காத்தல் அரிது - அவ் வெகுளப்பட்டார்க்குத் தீமை உண்டாகும்படி வைத்துக் காப்பது அரிது. (இல்லை என்றபடி)

**கருத்து:** முக்குணங்கட்கும் அப்பாற்சென்ற மெய்யுணர்வுடையார் தம்பால் ஒரோவழித் தோன்றும் வெகுளியை அதே கணத்தில் அடக்கிக் கொள்வார்கள்.

**குணம் மூன்று:** காமம், வெகுளி, மயக்கம், இவற்றை முறையே சத்துவம், இரசசு, தமசு என்பர் வடவர். இப் பண்புகளைத் தாண்டிய நிலையே மெய்யுணர்வு நிலை என்று கூறும் எண்ணூல்.

**ஒன்றாய் எங்கும் பரந்து நித்தியமாய்**
**அறிதற் கெளிதாய் முக்குணம் அன்றி**
**பொறியுணர் விக்கும் பொதுவும் அன்றி**
**எப்பொரு ளுந்தோன் றுதற்கிடம் அன்றி**
**அப்பொருள் எல்லாம் அறிந்திடற் குணர்வாய்**
**ஒன்றாய் எங்கும் பரந்து நித்தியமாய்**
**நின்றுள உணர்வாய் நிகழ்தரும் புருடன்**

*- மணிமே; சம, 226 - 232*

என்பது மீண்டும் நினைவுகூரத் தக்கது.

உலகுக்கு அறப்பனுவல் இயற்றுவார் வெகுளி மேற் கொள்ளின் அவ்வெகுளி, அவரிடமுள்ள எல்லாப் பண்பு களையுமே அழித்து விடும். ஆதலின், வெகுளி கணமேயும் காத்தல் அரிது என்றார்.

கணம் என்பது கண்ணிமைக்கும் நேரம். கண் முதனிலை. அது கணம் என ஈறு வேறுபட்டு நின்றதோர் ஆகுபெயராய் கண் இமைக்கும் நேரத் திற்கு ஆயிற்று. கபிலம் என்பதிற்போல. இதற்கு இவ்வாறே இலக்கணம் கூறினார் தொல்காப்பிய உரைகாரரும், கணம் என்ற சொல் வடமொழியில் க்ஷணம் ஆக்கப்பட்டது, கடைக்கண் - கடாக்ஷம் ஆக்கப்பட்டது போல.

அரிது - இன்மை குறித்தது. குணம் வடசொல் என்று கூறி இழுக்கடைவர் வடவர். குண்டு என்றதன் அடியாகப் பிறந்த தூய தமிழ்ச் சொல் அது. இவ்வாறு மறைமலையடிகளாரும் கூறினார்கள். குண்டு - தேங்குமிடம்; அறிவின் நோக்கம் அஃதே குணம் என்க. இச்செய்யுட்குப் பரிமேலழகர்கூறிய உரை தம் பயனற்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. துறவிக்குச் சினம் உண்டாகும், அச்சினம் சிறிது நேரமே இருக்குமாயினும், எதிரியை அழித்து விட்டுத்தான் மறுவேலை பார்க்கும். ஆதலால் வந்தேறிகள் காட்டும் பூச்சாண்டிகளுக்கு நீங்கள் நடுங்கி அவர் மகிழும் வண்ணம் நடந்து

கொள்ளுங்கள் என்பார். அவ்வாறு பொய்யுரை கூறினார் என்க.

இக்குறட்பாவுக்கு உரைக்கப் பெற்ற உரைமேல் எழும் ஆத்திக நாத்திகர் வினாவும் உரை ஆசிரியர் கூறிய விடையும் வருமாறு:

**நாத்திகன்:** குணத்தைக் குன்று என்றது என்ன?

**உரை ஆசிரியர்:** மனம் தன்னிலை நிற்றல் பொருள். அது பொறிவழிச் செல்லுங்கால் மனக்கோட்டம் எனப்படும். முக்குண வடிவான மனம் அசைதல் கூடாது என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். ஆதலால் குணத்தை அசைதலில்லாத குன்று என்று கூறினார்.

**நாத்திகன்:** ஏறி நின்று என்றது என்ன?

**உரை ஆசிரியர்:** மனம் இடம்விட்டு அசையாது நிற்றலை அவ்வாறு கூறினார். நிற்றல் - நிலைத்தல்.

**ஆத்திகன்:** கணமேயுங் காத்தல் அரிது என்றால் ஒரு கண நேரமும் தாழ்க்காமல் குற்றம் புரிந்தாரை ஒழித்து மறுவேலை பார்ப்பார் - நல்லவாறு நடந்து கொண்டவர்களை ஒரு கண நேரமாவது தாழ்க்காமல் அவர்க்கு மாடிவீடு உண்டாகும்படி செய்து விடுவார்கள் என்பது பொருள் அல்லவா?

**உரை ஆசிரியர்:** முக்குணம் மாறும் இயல்புடையது. இதனால்தான் முல்லானைப் பாடும்போது,

> **காலையில் ஒன்றாவர் கடும்பகலில் ஒன்றாவர்.**
> **மாலையில் ஒன்றாவர் மனிதரெல்லாம் - சாலவே**
> **முல்லானைப் போல முகமுமகமும் மலர்ந்த**
> **நல்லானைக் கண்டதில்லை நாம்**

என்று முக்குண இயல்பை விளக்கியருளினார். அவ்வாறு குணம் மாறுதல் அடையும்போது, அதாவது வெகுளி தலை காட்டுங் கால் அதை அதே கணத்தில் இல்லாமற் செய்து விடுவார்கள் தமிழ்ச் சான்றோர் என்றார் வள்ளுவப் பெருந்தகை.

**ஆத்திகன்:** காத்தல் அரிது என்றால்?

**உரை ஆசிரியர்:** இருக்கும்படி விட்டு வைப்பது இல்லை என்பது பொருளாகக் கொள்க.

- *குயில், கிழமை இதழ்*, 13. 9. 1960

## 30

**அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்**
**செந்தண்மை பூண்டொழுக லான்.**

**பி.மா.:** **எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்**
**அந்தணர் என்போர் அறவோர்.**

**பொருள்:** எவ்வுயிர்க்கும் - எவ்வுயிர்களிடத்திலும், செந்தண்மை பூண்டு ஒழுகலான்- செவ்விய அருளைப் பூண்டொழுகும் காரணத்தால், அந்தணர் என்போர் - அந்தணர் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் தமிழ்ச் சான்றோர், அறவோர் - துறவறத்தினர்.

**கருத்து:** தமிழ்ச் சான்றோர் எவ்வுயிர்கண் மாட்டும் அருளுடையர் ஆதலின் அவர் இல்லத்துறவிகளே.

பூணல் - நோன்பாக நோற்றல் என்றவாறு. அந்தணர் - அழகிய தட்பத்தையுடையார். “தட்பம்” அருள் என்றவாறு. அந்தணர் என்பதிலுள்ள அந்தண்மை என்பது தமிழில் பல சொற்களுக்கும் அடையாக வருவதுண்டு. அவை அந்தண் காவிரி, அந்தண் கூடல், அந்தண் பாதிரி முதலியன. இவற்றை யறியாது, அந்தணர் என்பதற்கு வேதாந்தத்தை அணவுவோர் என்று கூறும் குறிகெட்டவர்களும் உளர்.

### இவ்வுரை மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** அந்தணர் என்ற சொல் இப்போதுள்ள பார்ப்பனரைக் குறிக்கின்றதா?

**உரை ஆசிரியர்:** இல்லை.

**ஆத்திகன்:** பின்னையேன் பார்ப்பனரை அனைவரும் அந்தணர் என்று அழைக்கின்றனர்?

**உரை ஆசிரியர்:** அனைவருமா?

**ஆத்திகன்:** பெரும்பாலோர்.

**உரை ஆசிரியர்:** பெரும்பாலோரா?

**ஆத்திகன்:** சிலர்

**உரை ஆசிரியர்:** சிலரா?

**ஆத்திகன்:** பின் என்ன?

**உரை ஆசிரியர்:** அறிவற்ற சிலர் என்று கூற வேண்டும்.

**ஆத்திகன்:** அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்கள். அது ஏன்?

**உரை ஆசிரியர்:** அறிவற்ற சிலர் ஏன் பார்ப்பனரை அந்தணர் என்கின்றனர் என்பதா உம் கேள்வி?

**ஆத்திகன்:** அறிவற்றவர் ஆதலின் அவ்வாறு சொல்கின்றார்கள் போலும்.

**உரை ஆசிரியர்:** இப்போதுள்ள பார்ப்பனர் தம்மைப் பூசுரர் (உலகின் தேவர்) என்றும் சொல்லிக் கொள்கின்றனர். இது ஏமாற்று. அவ்வாறே தமிழர் சிலரும் சொல்கின்றனர். இது அறிவின்மை யின் பயன். அந்தணர் என்பவர் துறந்தோர் என்று வள்ளுவர் கூறியிருக்கவும் இவரா அவரா என்பது சரியா? எண்ணுக.

**நாத்திகன்:** துறந்தோராவார் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுதல் வேண்டுமோ?

**உரை ஆசிரியர்:** தன்னலத்தின் பொருட்டுப் படிற் றொழுக்கம் பூண்டுள்ளாரும் உலக குரு என்று தம்மைச் சொல்லிக் கொள் வோரும் மடத்தலைவர், தம்பிரான்கள் என்று சொல்லிக் கொள்வோரும் துறந்தவர் தாமோ?

கொலை வேள்வி செய்வோனும் அதைஆதரிப்போனும் துறந்தவனா? அந்தணனா? கோயில் திருவிழாத் தொடங்க எருமை மாட்டை வெட்டச் சொல்லும் பாவி துறந்தவனா? இல்லை என விடுக்க.

**- குயில், *கிழமை இதழ்*, 20. 9. 1960**

---

ப–ர்: **இவ்வதிகாரத்தில் எல்லாம் ஆதியினின்றே தோன்றின என்றும் உலக மக்கள் முதல்வனாகிய பகவனை – மெய் யுணர்வை அடைந்து நீடு வாழ வேண்டும் என்றும் கூறினார். ஆயினும் உலகின் தோற்றத்தையே கூறினார். தோன்றிய உலகு பெறத் தக்க பேற்றையும் இன்றியமையாமை கருதி உடன் கூறினார் என்க.**

## அதிகாரம் - 4

### அறன் வலியுறுத்தல்

**அஃதாவது:** அறம், ஆற்றல் உடையது என்பதைக் கூறுவது.

முன்னர் அறப்பனுவல் ஆசிரியரின் மேன்மையையும், அவ்வற நூற் பெருமையையும் கூறினார். இவ்வதிகாரத்தில் அறம் மிக ஆற்ற லுடையது. அதை மக்கள் மேற்கொண்டே ஒழுகுதல் வேண்டும் என வற்புறுத்தினராயிற்று. அறம் அறன் ஆனது, மொழி இறுதிப் போலி.

### 31

**சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்**
**காக்க மெவனோ வுயிர்க்கு.**

**பி.மா : சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தின்**
**ஊங்கு உயிர்க்கு ஆக்கம் எவன்.**

**பொருள்:** சிறப்பு ஈனும் - மெய்யுணர்வையும் நல்கும், செல்வமும் ஈனும் - கல்விச் செல்வம், பொருட்செல்வம் எனப் படும் செல்வத்தையும் நல்கும், அறத்தின் ஊங்கு - அறத்தை விட, உயிர்க்கு - மக்கட்கு, ஆக்கம் எவன் - உயர்நிலை வேறு எது?

**கருத்து:** அறமுடையான் அனைத்தும் உடையான்.

சிறப்பு - பொதுமையற்றது. அஃது மெய்யுணர்ந்த நிலை ஆதலின், சிறப்பு மெய்யுணர்வு எனப் பொருள் கொள்ளப்பட்டது. ஆக்கம் - உயர் நிலை. கடையில் நின்ற ஓகாரம் அசை. ஊங்கு - ஐந்தனுருபு எல்லைப் பொருளில் வந்தது.

### இவ்வுரை மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** அறன் வலியுறுத்தல் என்பதன் பொருள் விளங்கவில்லை.

**உரை ஆசிரியர்:** அறத்தின் ஆற்றலை (அறிந்து பின்பற்றும்படி) வலி யுறுத்துவது

நாத்திகன்: சிறப்பு என்றால் மெய்யுணர்வா?

உரை ஆசிரியர்: உரையை முழுதும் படித்துப் பார்க்க.

ஆத்திகன்: ஆக்கம் என்ன பொருள்?

உரை ஆசிரியர்: ஆக்கம், ஆக்கப்படுவதோர் செல்வத்திற்கு ஆனது காரணப் பெயர். செல்வம் ஒருவனுக்கு மேன்மையளிப்பதால் உயர்நிலை எனப் பொருள் கூறப்பட்டது.

ஆத்திகன்: அறம் என்றால் என்ன?

உரை ஆசிரியர்: மாசற்ற மனத்தால் நினைப்பனவும், நினைப்பின் பயனாக வரும் செயல்களும் – அறம், அறச் செயல்கள் என்று அறிக.

நாத்திகன்: மாசற்ற மனம் என்பது வடவர் கூறும் ஆத்மாவா?

உரை ஆசிரியர்: வடவர் சொல்லும் ஆத்மா என்பது பொருளற்ற சொல். மனம் உள்ள பொருள், அதன் தூய்மை, மக்கள் பெறத்தக்க பேறு என்பதே திருவள்ளுவர் கருத்து.

- *குயில், கிழமை இதழ்*, **27. 9. 1960**

## 32

**அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை**
**மறத்தலி னூங்கில்லை கேடு.**

**பி.மா.:** **ஆக்கம் அறத்தின் ஊங்கு இல்லை, கேடு அதனை**
**மறத்தலின் ஊங்கு இல்லை.**

பொருள்: அறத்தின் ஊங்கு - அறஞ் செய்வதை விட, ஆக்கமும் - ஒருவனுக்கு மேன்மை நிலையும், இல்லை - உண்டாதல் கிடையாது, அதனை - அந்த அறம் செய்வதை, மறத்தலின் ஊங்கு - மடமையால் மறந்து விடுவதைவிட, கேடு இல்லை - கேடான நிலை கிடையாது.

கருத்து: அறஞ்செய மறப்பதைவிட கேடான நிலை இருக்க முடியாது.

அறத்தின் பயன் முன்னும் கூறியவர் பின்னும் அதைக் கூறிய தென்ன எனில், அதனை மறத்தலினால் வரும் கேட்டினைத் தெளி வுறுத்த என்க.

## இவ்வுரை மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** இங்குக் கூறப்பட்ட மறதி பற்றி விளக்குக.

**உரை ஆசிரியர்:** அறம் செய்ய அட்டியில்லை. ஆனால் செய்யா திருந்துவிட்டதற்கு மறதிதான் காரணம் என்பவன் ஊரை ஏமாற்றுகிறவனே. தூய மனமானது. தூய செயலைச் செய்ய மறந்ததற்குக் காரணம் என்னவாயிருக்க வேண்டும்? அவன் உள்ளம் கேடுற்றிருக்க வேண்டும். இருக்கவே, கெட்ட செயலை - பாவச் செயலைச் செய்திருக்கவேண்டும். அதனால் விளைவது கேடே.

**நாத்திகன்:** ஊங்கு என்பது என்ன?

**உரை ஆசிரியர்:** பார்க்கிலும், காட்டிலும் என்ற பொருளையுடையது. ஐந்தாம் வேற்றுமை உருபாக நின்றது, இடைச்சொல்.

*- குயில், கிழமை இதழ்,* **4.10.1960**

## 33

**ஒல்லும் வகையா னறவினை யோவாதே**
**செல்லும்வா யெல்லாஞ் செயல்.**

**பி.மா.:** **செல்லும் வாய்எல்லாம் ஒல்லும்வகையான்**
**ஓவாதே அறம்வினை செயல்.**

**பொருள்:** செல்லும் வாய் எல்லாம் - மனஞ் செலுத்துமிடத்தும், சொற் செல்லுமிடத்தும், மெய் செல்லுமிடத்தும் ஆகிய எல்லாவிடத் திலும்; ஒல்லும் வகையான் - அவரவர்கட்கு இயன்றவகையால், ஓவாது - இடையறாது, அறம் வினை - அறச் செயல்களை, செயல் - செய்க.

**கருத்து:** எல்லாவிடத்திலும், இயன்றவகை இடையறாது அறம் செய்க.

கால்வாய் வெட்டிக் கங்கையைக் கொணர்வான் ஒருவன் செயலும் அறச் செயலே. இல்லார்க்கு ஒரு பிடிச்சோறிடுவான் ஒருவன் செயலும் அறச் செயலே. இவற்றில் எவனுக்கு எது இயலுமோ அதைச் செய்க என்பார் ஒல்லும் வகையான் என்றார். பெரிதோ சிறிதோ இடையறாது செய்க. இன்றேல், அல்வழிப்படும் மனம் என்பார் ஓவாதே என்றார். செயல் வியங்கோள் வினைமுற்று.

**இவ்வுரை மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:**

**ஆத்திகன்:** ஒல்லும் வகை?

**உரை ஆசிரியர்:** கூடிய மட்டும்

**நாத்திகன்:** எல்லாவிடத்தும் என்று வற்புறுத்தியதென்ன?

**உரை ஆசிரியர்:** நடையிற் கிடந்த வைக்கோலை அங்கிருந்த மாட்டிற்கு எடுத்துப் போட்டான். அவன் கடையிற் குந்தி கள்ள வாணிகம் செய்தால் என்ன பயன்?

**ஆத்திகன்:** சிவன் கோயிலுக்குப் போக வேண்டிய நேரத்தில் சிற்றிலக்கண வினா விடை படித்தல் அறமா?

**உரை ஆசிரியர்:** கோயிலுக்குப் போகாதிருப்பதும், சிற்றிலக்கணம் படிப்பதுமாகிய இரண்டும் அறமே.

**- *குயில், கிழமை இதழ்,* 4.10.1960**

## 34

**மனத்துக்கண் மாசில னாத லனைத்தற**
**னாகுல நீர பிற.**

**பி.மா.:** **மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து**
**அறன் பிற ஆகுலம் நீர.**

பொருள்: மனத்துக்கண் - மனத்தில், மாசு இலன் ஆதல் அனைத்து அறன் - மாசு இலாதவன் ஆகுவது எந்த அளவோ அந்த அளவுக்கு அவன் அறமுடையவன். பிற- மாசு உளன் ஆகுதல் எல்லாம், ஆகுல நீர - பொய் விளம்பரத் தன்மை யுடையவை.

கருத்து: அறம் என்பது மன மாசு அற்ற நிலை.

மாசு என்பது குற்றம், தீயன எண்ணுதல், தூய உள்ளத்தானன்றித் தீய உள்ளத்தால் ஒன்று செய்து செல்வான்; அது தூயதாகக் காட்டப் பெரிய விளம்பரம் செய்வான். அதையே ஆகுலநீர என்றார். ஆகுலம் - அகம் கலித்தல் என்றதன் மரூஉ. மனம் அத்து, கண், அத்துச்சாரியை. கண் ஏழனுருபு. மனம் - பொறிவழிச் செல்லாது ஒரு வழி மன்னுவது எது? அது மனம். காரணப் பெயர்.

முழுமை அறம் என்பது மெய்யுணர்வு பெற்றநிலை, அஃது வீட்டு நிலை எனப்படும். முழுமையற்ற அறத்தையே இங்கு மாசு இலன் ஆதல் அனைத்து என்றுரைத்தார். மனத்துக்கண் எவ்வளவு மாசு தீர்ந்ததோ அவ்வளவு அறம் என்றார் என அறிதல் வேண்டும். அனைத்து - அத்தனைத்து மரூஉ மொழி. பிற - பலவின் பால் குறிப்பு வினையாலணை யும் பெயர். எழுவாய். நீர - பலவின்பாற் குறிப்பு வினை முற்று. மாசு தீர்ந்த மனம் அறம் என ஆசிரியர் அருளிய இது. இதற்கு முன் உலகுக்கே தெரியாத ஒன்று.

## இவ்வுரை மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** மாசிலன் ஆதல் அனைத்து அறம் என்பதை விளக்குக.

**உரை ஆசிரியர்:** அனைத்து என்பது அத்தனை அல்லது அவ்வளவு என்றபடி எவ்வளவு மாசு போயிற்றோ அவ்வளவு அறம் என்றாம்.

**நாத்திகன்:** அறம் என்பது இன்னது என்று விளக்கினார் திருவள்ளுவரை யன்றி வேறெவரும் இலரோ?

**உரை ஆசிரியர்:** இவ்வகையில் விளக்கினார் திருவள்ளுவரே. வேறு வகையில் விளக்கினார் சாக்கரிட்டீசு என்பார். அவர் விளக்கியது: அறம் என்பது இன்பத்தைப் பெறுவதோர் ஆற்றல் என்பது. இவ்வாறு கூறியதில் அறம் என்பதன் விளக்கம் நிரம்பாமை அறிக.

**ஆத்திகன்:** முழுமை அறம் என்பது மெய்யுணர்வு என்றும் அதுவே வீடுபெற்ற நிலை என்பதும் உங்கள் கருத்தா?

**உரை ஆசிரியர்:** மாசற்ற மனம் மெய்யுணர்வு என்பது என் கருத்து. மெய்யுணர்வு பெற்ற நிலையே வீட்டு நிலை என்பது எண்ணூல் (சாங்கியம்) கருத்தாகும்.

- *குயில், கிழமை இதழ்,* **11.10.1960**

## 35

**அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொன் னான்கு**
**மிழுக்கா வியன்ற தறம்.**

**பி. :** **அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்.**

**பொருள்:** அழுக்காறு - பிறர் ஆக்கங்கண்டு பொறாமையும், அவா - ஐம்புலன்கள் மேலும் செல்லுகின்ற அவாவும், வெகுளி - அவாக் காரணமாக எழும் சினமும், இன்னாச் சொல் - இனிமை யில்லாத கடுஞ் சொற்களைச் சொல்லுதலும் ஆகிய நான்கும், இந்த நான்கு குற்றங்களையும், இழுக்கா - நீக்கி, இயன்றது - நடந்தது எதுவோ அது, அறம் - அறமாம்.

**கருத்து:** மனக் குற்றங்களின் வழி இயல்வது அறமாகாது.

இழுக்கா - செய்யா என்னும் வாய்ப்பாட்டு இறந்தகாலத் தெரி நிலை வினையெச்சம். இழுக்கி என்பது பொருள். இழுக்கி - நீக்கி.

## இவ்வுரை மேல் எழும் ஆத்திக நாத்திக வினாவும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** இழுக்கா வியன்ற தறம் என்பதை வேறு வகையில் பிரித்துப் பொருள் கூறலாமோ?

**உரை ஆசிரியர்:** ஆம், இழுக்கு **ஆ** இயன்றது அறம் என்ற பொருள் கூறலாம். அப்படிக் கொள்ளும்போது **ஆ** என்பது ஆக எனப் பிரித்து இழுக்காக இயன்றது என்று என்பதின் கடைக்குறை என்க. அழுக்காறு முதலிய நான்கும் குற்றமாக வைத்து மற்றப் பண்புகளின் வழியே தோன்றுவது அறம் என்று விரித்துரைக்க.

**நாத்திகன்:** அவா இன்றேல் செயல் எவ்வாறு தோன்றும்?

**உரை ஆசிரியர்:** அவா என்றது இங்குத் தன்னலத்தின் பொருட்டே பொருள்களின் மேற் செல்லும் பேராசையை! அத்தகைய அவா இன்றிச் செயல் செய்தல் வேண்டும். செய்யவே குற்றம் நிகழாது.

**ஆத்திகன்:** வெகுளி நீங்கவே இன்னாச்சொல், சொல்லலும் நீங்கும். ஆகவே, வெகுளியைச் சொன்னவர் இன்னாச் சொல்லைச் சொல்லவேண்டியதென்ன?

**உரை ஆசிரியர்:** இன்னாச்சொல் வெகுளியால் மட்டும் எழும் எனல் வேண்டாம். அஃதின்றியும் தோன்றுதல் கூடும். கேலிச் சொல் முதலியவும் இன்னா செய்தலினால் அவையும் இன்னாச் சொற்களே ஆகும்.

**- குயில், கிழமை இதழ், 18.10.1960**

## 36

**அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.**

**பி. : அன்று அறிவாம் என்னாது அறம் செய்க மற்று அது
பொன்றும் கால் பொன்றாத் துணை.**

**பொருள்:** அன்று அறிவாம் - உடல் அழியும் காலத்திற் பார்த்துக் கொள்ளுவோம், என்னாது - என்று எண்ணாமல், அறம் செய்க - இடையறாது என்றும் அறத்தைச் செய்து கொண்டிருக்க, அது - ஏனெனில் அவ்வறமானது, பொன்றுங்கால் - உடல் அழியும் நேரத்தில், பொன்றாத்துணை - மற்றோர் அழியா வுடம்பு.

**கருத்து:** பருவுடல் போயினும் புகழுடல் தருவது அறம்.

துணை - அறம் செய்தற்கும், உயிர் மேவுதற்கும் துணையாவது. ஆதலின் உடம்பைத் துணை என்றார். பொன்றாத் துணை- கெடாத உடம்பு, புகழ் என்றவாறு. மற்று - அசை. பொன்றுங் கால் - பெயரெச்சத் தொடர், கால் - காலம், கடை - குறைந்தது.

சாதலின் இன்னாதது இல்லை என்றார் இவ்வாசிரியர். அச் சாக்காட்டுத் துன்பம் ஏற்படும்போது அதை நீக்குவது மருத்துவனாலும் ஆகாது. ஆயின் அவன் தேடியுள்ள புகழே நீக்க வல்லது. அஃதேயு மின்றி அப்புகழ் அத்துன்பத்தை இன்பமாக்கி விடும். இவ்வுடம்பு செல் லினும் செல்லுக இதோ நிலைபெறுகின்றது புகழுடம்பு என்றெண்ணி அமைதியடை வான் என்பார் இவ்வாறு கூறினார் ஆசிரியர்.

இதற்குப் பிறரெல்லாம் உடம்பை விட்டு உயிர்போகும் பொழுது அறம் அவ்வுயிருக்குத் துணையாகச் செல்லும் என்று கருதும்படி பொருள் கூறுவார். சமய நிலை ஒன்று, சமயம் அற்ற நிலை ஒன்று. இரண்டுக்கும் பொதுவாக நின்று செய்யுள் செய்தார் ஆசிரியர். போம் உயிருக்கு அறம் துணை செல்வது என்பது சமயநிலைச் சார்பாகும் என விடுக்க.

### இக்குறட்பாவின் உரை மேல் எழும் ஆத்திக, நாத்திக வினாவும், உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** பொன்றும் கால் பொன்றாத்துணை என்றதின் பொருள் உயிர் சென்று மற்றோர் உடலிற் சேரும்போது என்று பொருள் கொள்வது நன்று அன்றோ?

**உரை ஆசிரியர்:** மறுபிறப்புக் கொள்கையை நிலை நாட்ட எண்ணும் மதக் கணக்கர் அவ்வாறு பொருள் கொள்வார் எனினும் அவர் கூறும் பொருளுக்கு ஏற்ப என்ன இருக்கிறது இங்கே? பொன்றுதல் - கெடுதல். எது கெடுதல்? உடம்பு தானே? உயிரா கெடும்? அல்லது பொன்றுதல் எனின் உடம்பைவிட்டு உயிர் நீங்குதல் என்று பொருள் கொள்ளவேண்டும் எனில் அவ்வாறு நலிந்து பொருள் கொள்ள வேண்டிய தேவை என்ன வந்தது? மதக் கணக்கருக்கு ஆக்கந் தேடித் தர வேண்டியவர் உரை யாசிரியரா? சரியன்று! நாம் சொல்லி யுள்ள உரையை மற்றும் (ஒருமுறை) படித்துப் பார்க்க. அதுவே வள்ளுவர் உள்ளம் என்பதை நுணுகி ஆய்க.

அறத்தால் புகழ் வரும்! அறஞ் செய்தானுக்கு ஏற்பட்டுள்ள புகழை அவ்வறஞ் செய்தான் அறியும் சூழ்நிலை ஏற்படும். அவன் பருவுடல் அழியும் போது அவனுக்கு ஏற்பட்ட புகழ் அவனை நோக்கித் தேறுதல் கூறும் 'நீ சாகவில்லை; இருக்கின்றாய்; எப்போதும் இருப்பாய்' என்று! மக்கள் தேடத் தக்கதும் இதுதானே!

**- *குயில், கிழமை இதழ்,* 25.10.1960**

## 37

**அறத்தா றிதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோ டூர்ந்தா னிடை.**

**பி.மா.:** **சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை**
**அறத்து ஆறு இது என வேண்டா.**

**பொருள்:** சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் - பல்லக்குச் சுமந்து போவானும் ஏறிச் செல்வானுமாகிய இருவரினது, இடை - நடுவில் நின்று, அறத்து ஆறு இது என வேண்டா - அறத்தினது பயன் இதுதான் என்று பணிகளில் உயர்வு தாழ்வு காண்பது விரும்பத்தக்க தன்று.

**கருத்து:** செய்யுந் தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை.

ஏறிச் செல்வான் உயர்ந்தான் ஆதலுமில்லை; சுமந்து செல்வான் தாழ்ந்தானாதலுமில்லை. அஃதேயுமன்றி ஏறிச் செல்லும் நிலை

உயர்ந்தது மில்லை; சுமந்து செல்லும் நிலை தாழ்ந்ததுமில்லை. முயற்சி மிகுதியாலும் குறைவாலும் ஏற்படும் அன்றைய நிலை வேறுபாடு அது. முயற்சி திரு வினை ஆக்கும் அன்றோ! இவற்றையெல்லாம் கருதாது சில சமயத்தவர் கூறுவதை மேற்கொண்டு மயங்குதல் விரும்பத் தக்கதாமோ! வந்தேறிகள், முற்பிறப்பில் தம்மைக் கருதி நன்கொடை கொடுத்து ஏமாறுதலாகிய அறத்தைச் செய்தால், வரும் பிறப்பில் உயர்நிலை அடையலாம் என்று கூறி மறுபிறப்புக் கொள்கையை இந்நாட்டிற் பரப்பி நம்பச் செய்தார்கள். அதை ஆசிரியர் முற்றும் மறுப்பார் இவ்வாறு கூறினார். இடை-நடுவிடம் வேற்றுமையுருபன்று. பொன்றாத்துணை பெயரெச்சத் தொடர். பொன்றா ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். சிவிகை - விசிகை எழுத்து நிலை மாறிய போலி, சிவிறி - விசிறி போல. விசித்தல் - இழுத்துக் கட்டுதல், சிவிகைக்கு ஆகுபெயர்.

அறத்தாறு இது என வேண்டா - என்றது இன்னதல்ல இதுவென மொழிந்தது.

### இக்குறட்பாவின் உரைமேல் எழும் ஆத்திக நாத்திக வினாக்களும் உரை ஆசிரியர் விடையும் வருமாறு:

**ஆத்திகன்:** ஆத்திகர் கொள்கைக்கும், ஆரியர் நான்மறைக் கொள்கைக்கும் பரிமேலழகர், மணக்குடவர் முதலிய உரை யாசிரியர் கொள்கைக்கும் இழுக்குத் தேடும் முகத்தால் இக்குறட்பாவுக்கு இவ்வாறு உரை கூறியது பொருந்துமா?

**உரை ஆசிரியர்:** இவ்வாறு நாம் கூறிய இவ்வுரை ஒன்றுதான் பொருந்தும்! இதுவே வள்ளுவர் உள்ளமும் ஆகும் என்க. இக்கருத்தில் இக்குறட்பாவை வள்ளுவர் அருளிச் செய்ய வில்லை எனில் அவர் உலகினர்க்கு இன்றியமையாது சொல்ல வேண்டிய ஒன்றைச் சொல்லா தொழிந்தார் என்ற பழி அவருக் கேற்படும். குறளில் எல்லாம் உண்டு என்ற சொல்லுக்கும் இழுக்கு ஏற்பட்டிருக்கும். செய்யும் தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை என்ற உண்மையை இக்குறட்பாவில் அன்றி வேறு எங்கும் வள்ளுவர் கூறவில்லை.

- *குயில், கிழமை இதழ்,* **1.11.1960**

## 38

**வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்**
**வாழ்நாள் வழியடைக்குங் கல்.**

**பி. : வீழ்நாள் படாஅமை நன்று ஆற்றின் அஃது**
**ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல்.**

**பொருள்:** வீழ் நாள் படாஅமை - (அறம்) செய்யாமற் கழிந்த நாள் இல்லாமல், நன்று - அறத்தை, ஆற்றின் - செய்து வருவானா னால், அஃது - அந்த அறமானது, ஒருவன் - ஒருவனின், வாழ்நாள் வழி அடைக்கும் கல் - வாழ் நாட்கள் அழிந்தோடாமல், சாகாமையைத் தேக்குவதோர் அடை கல்.

**கருத்து:** அறம் வாழ்நாள் கழிந்து போகாமல் சாவாமையைத் தேக்கி வைப்பதோர் அடைகல்.

இடைவிடாது அறமே செய்து கொண்டிருப்பான் ஒருவனின் வாழ்நாள் வீணிற் கழியாது. எனவே, அவனுக்கு மூப்புவராது, சாக்காடு அண்டாது என்றால், ஒருவன் அறமே செய்து நாட்களைப் பயனுள் ளனவாக்கினால் அந்நாட்கள் மட்டும் கழியாது நிற்குமா? அதனால் மூப்பு வராமற் போகுமா? சாக்காடு அண்டாதோ? - என்று கேட்கலாம்.

இடைவிடாது அறமே செய்வான் ஒருவனுக்கு மட்டும் வாழ்நாள் கழிவதில்லை. அந்த அறம் அவனுக்குச் சாகாமையைச் சேர்க்கின்றது என்று நம்ப வேண்டும். அவ்வாறு நம்புவோன் பிழை செய்துவிட்ட வனாகான். தீமைக்குட்பட மாட்டான். அவன் சாகான்; என்றும் இன்புற்றிருப்பான். அவனால் உலகம் இன்புறும், துன்பு நீங்கும்.

**யாண்டுபல ஆக நரையில ஆகுதல்**
**யாங்காகியர் என வினவுதி ராயின்**
**மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்**
**யான் கண் டனையர் என் இளையரும் வேந்தனும்**
**அல்லவை செய்யான் காக்கு மதன்றலை**
**ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.** *- புறம். 192*

இல்லந் துறந்த புலவன் ஒருவன் இடைவிடாது அறமே செய்து வந்தான்; அதுவேயுமன்றி அவன் ஏவல் கேட்போர் எல்லோரையும் அறமே செய்விப்பதோர் அறத்தையும் செய்தான்; அதுவுமேயன்றி

அரசனையும் அறந்தவறாத வனாக்குவதோர் அறத்தையும் செய்தான்; அவன் மனைவி மக்களையும் அறிவு நிரம்பியவராதற்குரிய அறப் பண்பாடும் மிக்கிருந்தான்; ஆன்றவிந்தடங்கிய சான்றோர் வாழும் ஊராகத் தன்னூரை ஆக்குவதோர் பேரறத்தையும் செய்து வந்தான். அவ்வாறாக அவனை நரையே அடையவில்லை. என்ற கருத்துக்களைத் தன்னுட் கொண்டமைந்தது இச்செய்யுள்.

இவ்வாறு சொன்னால், அவ்வறவோனுக்குப் பிறகு நரைக்காதா? அவன் சாகமாட்டான் என்று நம்புவது எப்படி? - என்று கேட்கலாம்.

நரை என்பது காலத்தால் ஏற்படும் மாறுதல் என்பார் மேற்புல் மேய்வார். அவ்வாறு கூறுவது தவறு. "காலம்" என்பதோர் தனிப் பொருள் இல்லை என்பதை ஊன்றி உணர வேண்டும். ஆனால் பொருளின் நிகழ்ச்சி என்பது ஒன்று உண்டு. மகன் ஒரு பொருள், அப் பொருளின் நிகழ்ச்சி என்பது அவனின் தொழில்கள். அத்தொழில்கள் அறம் பற்றியவை, பாவம் பற்றியவை என இருவகைப்படும். பாவம் பற்றிய தொழில்கள் விரைவும் குறியும் அற்றவை. அறம் பற்றிய தொழில்கள் விரைவுடையவை. குறியுள்ளவை (குறி - இலக்கு).

வண்டியுருளையின் ஆரையின் விரைவுக்கு உலகின் காலக் கணக்குச் செல்லும். மகன் என்பதோர் உயிர் உருளையின் ஆரையின் விரைவுக்கு அது செல்லாது. அவ்வறவோன் அறச் செயலின் விரைவு தன் இலக்கை அடையும் வரைக்கும் நிற்காது. அவ்விடத்தில் உலகின் காலக் கணக்குப் பயனற்றுப் போகும். ஏனென்றால், காலம் என்பதோர் தனிப்பொருள் இல்லை. பொருளின் நிகழ்ச்சி என்பது உண்டு.

**இறப்பே நிகழ்வே எதிரது என்னும்**
**திறத்தியல் மருங்கில், தெரிந்தனர் உள்ளப்**
**பொருள் நிகழ்வு உரைப்பது காலம் ஆகும்.** - *தொல். 732*

என்பதை ஊன்றியுணர்க.

அம்ருதம் உண்ணுபவர்கள் சாகாதிருந்தனர் என்னும் பொய்யான புராணக் கருத்தை நம்புவாரை அப்பாழுங் கிணற்றினின்று மீட்டு நன்னெறி காட்டினார் இப்பாட்டினால் ஆசிரியர்.

வீழ்நாள், வாழ்நாள் வினைத்தொகை நிலைத்தொடர்கள். படாஅமை - உயிரளபெடை. நன்று - அறம் என்றவாறு. வழியடைத்தல் - அது செல்லும் வழியடைத்துச் சாகாமை காத்தல். ஆற்றின் - செயின் என்னும் வாய்ப்பாட்டு எதிர்கால தெரிநிலை வினையெச்சம்.

அறம் பிறவியை அகற்றும் என்ற கருத்தில் பிறரெல்லாம் நலிந்து பொருள் கூறி இழுக்குவார். அவர்தம் சமயம் நோக்கி மக்களை இழுக்க முயல்வார் என விடுக்க.

- *குயில், கிழமை இதழ்*, **8.11.1960**

## 39

**அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்**
**புறத்த புகழு மில.**

**பி. : அறத்தான் வருவதே இன்பம் மற்றஎல்லாம்**
**புறத்த புகழும் இல.**

**பொருள்:** அறத்தான் - நன்று ஆற்றுவதோர் ஆற்றலின் காரணமாக, வருவதே இன்பம் - வருவதே இன்பமாகும். மற்ற எல்லாம் - அறமல்லாத வழியில் செய்யப்படும் செயல் அனைத்தும், புறத்த - இன்பத்தின் புறமாகிய துன்பத்தின் பாற்பட்டவை, புகழும் இல- அச்செயல்களால் புகழும் ஏற்படா.

**கருத்து:** இன்பம் என்பது அறத்தால் வருவது.

அறத்தான் - ஆன் மூன்றாவதன் உருபு. முதற் கருவிப் பொருளது. இன்பம் என்பது காம நுகர்ச்சி என்றார் பரிமேலழகர். காம நுகர்ச்சி மட்டும் இன்பம் அன்று; ஈத்து வத்தலும் இன்பம்; குழந்தை மழலை கேட்டலும் இன்பம். மனமகிழ்ச்சியே இன்பம் என்க. இன்பம் காம நுகர்ச்சியே என்று பொருந்தாப் பொருள் கொண்டதால் அறத்தால் வருவதே இன்பம் என்பதற்கு இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பம் என நலிந்து பொருள் கொள்ள நேர்ந்தது. அற ஒழுக்கத்தின் பாற்பட்ட மனையாளோடு கூடிச் செய்யும் அறத்தாலும், இல்லந்துறந்து செய்யும் அறத்தாலும் இன்பம் வரும். மற்றெல்லாம் - மற்ற எல்லாம், அகரம் தொக்கது. புறத்த, இல - பலவின்பால் குறிப்பு முற்றுக்கள்.

- *குயில், கிழமை இதழ்*, **15.11.1960**

## 40

**செயற்பால தோரு மறனே யொருவற்**
**குயற்பால தோரும் பழி.**

**பி.மா: ஒருவற்கு செயற்பாலது ஒரும் அறனே**
**உயற் பாலது ஓரும் பழி.**

**பொருள்:** ஒருவற்கு செயற்பாலது - ஒருவனுக்குச் செய்யத்தக்கது, ஒரும் அறனே - ஆராய்ந்து செய்யப்படும் அறமேயாகும், உயற் பாலது - நீக்கத்தக்கது, ஒரும்பழி - அவன் அறிந்த பழி.

**கருத்து:** தெரிந்து செய்யத் தக்கது அறம், தெரிந்து நீக்கத் தக்கது பழி.

ஓர்தல் - ஆராய்தல். ஒரும் அறன், ஒரும் பழி பெயரெச்சத் தொடர்கள். தெரியாது செய்யும் குற்றம் குற்றமன்று. தெரிந்து செய்வது குற்றம். ஆதலால் ஒரும் பழி என்றார். அவ்வாறே ஒரும் அறமும் கொள்க. அறம் - அறன். போலி. செயற்பாலது உயற் பாலது குறிப்பு வினை முற்றுக்கள். அவை முதல் வேற்றுமையில் வந்தன. வினையாலணை யும் பெயர்கள். பழிக்குக் காரணமாகிய பாவத்தைப் பழி என்றார்.

**- *குயில், கிழமை இதழ்,* 15.11.1960**

---

ப-ர் : இவ்வதிகாரத்தால் அறத்தின் பயன், மேற்கொள்ளும் முறை, அறம் இன்னதென்பது, செய்யவேண்டியதன் இன்றியமை யாமை, இன்னது அறமன்று, இன்னது அறம் என ஐயம் அறுப்பு, அறம் சாகாமை ஆக்கும் என்பது, அறமே இன்பம் என்பது ஆகியவற்றை விளக்கினார் ஆசிரியர்.

முடிந்த நான்கதிகாரங்களால் உலகின் தோற்றத்தையே கூறினார். என்னை? ஆதியினின்று உலகு விரிந்து, உணர்வை நாடி, மழையால் நிலை நின்று, சான்றோரால் காப்பாற்றத் தோன்றிய தோற்றத்தைக் கூறியதன்றி வேறின்றாதலின்.

**பொருள்:** ஒருவற்கு செயற்பாலது - ஒருவனுக்குச் செய்யத்தக்கது, ஓரும் அறனே - ஆராய்ந்து செய்யப்படும் அறமேயாகும், உயற் பாலது - நீக்கத்தக்கது, ஓரும்பழி - அவன் அறிந்த பழி.

**கருத்து:** தெரிந்து செய்யத் தக்கது அறம், தெரிந்து நீக்கத் தக்கது பழி.

ஓர்தல் - ஆராய்தல். ஓரும் அறன், ஓரும் பழி பெயரெச்சத் தொடர்கள். தெரியாது செய்யும் குற்றம் குற்றமன்று. தெரிந்து செய்வது குற்றம். ஆதலால் ஓரும் பழி என்றார். அவ்வாறே ஓரும் அறமும் கொள்க. அறம் - அறன். போலி. செயற்பாலது உயற் பாலது குறிப்பு வினை முற்றுக்கள். அவை முதல் வேற்றுமையில் வந்தன. வினையாலணை யும் பெயர்கள். பழிக்குக் காரணமாகிய பாவத்தைப் பழி என்றார்.

**- *குயில், கிழமை இதழ், 15.11.1960***

---

ப-ர் : இவ்வதிகாரத்தால் அறத்தின் பயன், மேற்கொள்ளும் முறை, அறம் இன்னதென்பது, செய்யவேண்டியதன் இன்றியமை யாமை, இன்னது அறமன்று, இன்னது அறம் என ஐயம் அறுப்பு, அறம் சாகாமை ஆக்கும் என்பது, அறமே இன்பம் என்பது ஆகியவற்றை விளக்கினார் ஆசிரியர்.

முடிந்த நான்கதிகாரங்களால் உலகின் தோற்றத்தையே கூறினார். என்னை? ஆதியினின்று உலகு விரிந்து, உணர்வை நாடி, மழையால் நிலை நின்று, சான்றோரால் காப்பாற்றத் தோன்றிய தோற்றத்தைக் கூறியதன்றி வேறின்றாதலின்.